தென்றல்

✳ ஆசிரியர் ✳ கண்ணதாசன். ✳

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம் : 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை | 29-12-56 | சனிக்கிழமை | இதழ் 18

"நேருஜியா? அண்ணாதுரையா?"

தி. மு. கழகம் தேர்தலிலே பங்கேற்கும் என அறிவித்த பிறகு தமிழகத்தில் மட்டுமல்ல, அகில இந்தியாவிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. எளிதிலே முடிவுற்ற சாதாரணக் காரியங்களைக்கூட, தமிழ்நாட்டுக் காங்கிரஸ் ஆற அமர யோசித்துச் செய்கிறது; அபேட்சகர்களை எடைபோட்டுப் பார்க்கிறது. ஒரு காலத்தில் கழகம் என்றால் 'கால்தூசு' என்று பேசியவர்கள், இவர்களால் பொதுமக்களிடம் நெருங்கவே முடியாது என்று கதைத்தவர்கள்; கம்யூனிசமும், இந்தமகாசபையின் விஷக் கொள்கைகளும் தான் இந்த நாட்டைப் பிடித்துக்கொள்ளப் போகிறது என்று அவைகளையே பெரிதாக்கி கச்சேரி நடத்தியவர்கள், இப்போது நம்மையே பிரச்சினையாக்கிப் பயந்து அல்லும் பகலும் காங்கிரசின் வெற்றிக்குப் பிரயத்தனம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

கழகத்தின் தலைவர்களை அந்த 'மகா புத்திசாலிகள்' மதிப்பதில்லை. சினிமாவுக்கு வசனம் எழுதுகிறவர்கள், ரோமாபுரி ராணிகளை எழுதுகிறவர்கள், கம்பரசம் தருபவர்கள் என்றெல்லாம் தங்களின் நிலை மறந்து பேசினார்கள். இப்போது என்ன ஆயிற்று நிலைமை? தங்களுக்கு இணையாகக்கூட தி. மு. கழகத்தின் தலைவர்களை மதிக்காதிருந்தவர்கள் இப்போது எப்படிப் பேசுகிறார்கள்? பொறுப்புள்ள அமைச்சர்களே **"பண்டித நேரு வேண்டுமா, அண்ணாதுரை வேண்டுமா?"** என்று மக்கள் மன்றததைப் பார்த்துக் கேட்கிறார்கள். தமிழகத்து அரசியல் இவ்வளவு சீக்கிரத்தில் இப்படி மாறுமென்று கனம்கள் எண்ணியிருக்கமாட்டார்கள்.

தற்போதுள்ள அரசியல் தலைவர்களில், மற்றவர்களின் திறமைக்கு மதிப்பளிக்கும் பெருங்குணங் கொண்டவர் அறிஞர் அண்ணா அவர்கள்தான் என்பதை நடுமால் துணிந்து கூறமுடியும். மாற்றாரில் நல்லோர் இவ்வுண்மையை மறுக்கத் துணியார். அண்ணா அவர்களே பல மேடைகளில நேருவின் தியாக சீலத்தைப் புகழ்ந்திருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டிலே இருக்கும் எடுபிடிகள், நேருஜியா அண்ணாதுரையா என்று கேட்கிறார்கள். அண்ணா அவர்கள் இதற்குச் சரியான பதிலுரைத்தார்கள். **" கட்டி முடித்த கோபுரத்தோடு கொட்டிக் கிடக்கும் செங்கல்லை ஒப்பிடுகிறார்கள் "** என்று சென்ற கிழமை சென்னை நேப்பியர் பூங்கா கூட்டத்தில் அண்ணா அவர்கள் விளக்கிச் சொன்னார்கள். அதோடு காங்கிரஸ் கட்சி தமிழகத்திலே தன்னம்பிக்கை இழந்துவிட்டதாகத் தெரிகிறது என்பதையும விளக்கிப் பேசினார்கள்.

நேருஜியா, அண்ணாதுரையா? —தமிழகத்து மக்களிடம் எந்த வாக்குறுதியும் இனிச் செல்லுபடியாகாது என்று கருதித்தான் கடைசி ஆட்டக்காயாக நேருவைப் பயன்படுத்தத் துணிந்துவிட்டனர் காங்கிரசார் என்பது கண்கூடாகிவிட்டது. அதற்கான சூத்திரம்தான், 'நேருஜியா-அண்ணாதுரையா?' என்பது. இன்னொன்று 'நேருவுக்கு இணையானவர் எங்கள் அண்ணா' என்று, நாங்கள் சொன்னால், மந்திரிமார் அதைக் கேலி செய்ய நியாயமுண்டு. ஆனால் இப்போது, அவர்களே தமிழ்நாட்டில் ஒரு தலைவரைத் தேடிப் பிடித்து நேருவுக்கு இணைகட்டிக் காட்டுகிறார்கள். அவர்களுக்கே அவ்வாறு படுகிறது! நாம் என்ன செய்வது!

'புகழைத் தேடி ஓடாதே! தொடர்ந்து பணி செய்! தூய பணி செய்! புகழ் உன்னைத் தேடி வரும்'-என்ற பொன்மொழியை, தென்னாட்டு அரசியலில் புகுத்தி அதற்கு உயிரைக் கொடுத்த ஒரே ஒரு தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் தான். அவர் என்றுமே நாக்கைத் தனக்கு எஜமானனாக்கிக் கொண்டதில்லை. அவருடைய பொது வாழ்க்கையில் நாக்கிற்கு அவர் பணிவதாகவும் இல்லை. எளிதில் - ஆதாரமில்லாமல், தத்திக்கு அப்பாற்பட்ட சொற்களை வீசி விடமாட்டார். தன்னடக்கமிக்க பெருந்தலைவன் என்ற பெயரைச் சம்பாதித்துக்கொண்டவர். அவரே, நேருஜியா அண்ணாதுரையா? என்று அமைச்சர்கள் பேசி வருவதைக் கேட்டு அன்றைய நேப்பியர் பூங்காக் கூட்டத்தில் மனம்விட்டுப் பேசியிருக்கிறார். அமைச்சர்களுக்கு அக்கறையிருந்தால் அண்ணா அவர்களின் சொற்பொழிவைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். "நேருஜியா அண்ணாதுரையா? என்று கேட்கிறார்கள் அமைச்சர்கள். நான் என்றுமே நேருவை குறைவாகக் கருதியதில்லை. அவரோடு என்னை ஒப்பிடுகிறார்கள்! அவர் கட்டி முடித்த கோபுரம்-நான் கொட்டிக் கிடக்கும் செங்கல்!..... ஆனால் நேரு இருக்கும் நாட்டில் அண்ணாதுரை வாழ முடியாது என்பதல்ல. ஆறடி உயரம் உள்ளவன் தான் மனிதன், ஐந்தடி உள்ளவன் மனிதனில்லையா?.........நேருஜியா அண்ணாதுரையா என்று கேட்கும் அமைச்சர்களுக்கு ஒன்று சொல்வேன். பண்டித நேரு ஜனவரி இறுதியிலோ பிப்ரவரி முதல் வாரத்திலோ சென்னைக்கு வர இருக்கிறார். எனக்கு அவரோடு பேச வாய்ப்பளியுங்கள். நான், பாரதம் கூட்டுச் சேர்க்கை; ஒரே நாடல்ல என்று பேசுகிறேன். தவறு இருந்தால் திருத்தட்டும். அல்லது நான் சொல்வதுதான் சரியென்றால் ஏற்றுக்

— 3-ம் பக்கம் —

குபேரன் கண்ணீர்!

இரவு நேரம்- பனி பெய்து கொண்டிருந்தது. வானத்திலே நிலவு பவனி வந்து கொண்டிருந்தது. செல்வம் படைத்த அவன், தனது மாளிகையை அடுத்த தோட்டத்திலே நடந்துகொண்டிருந்தான். அமைதி அவனது காலடியிலே சிக்கிக் கிடந்தது. பிணத்தைச் சுற்றி வட்டமிடும் கழுகைப் போல, நிம்மதியின்மை அவனது இதயத்தைச் சுற்றிக் கொண்டிருந்தது. தோட்டத்தை அடுத்த ஏரியின் கரைக்கு வந்துவிட்டான். நிலவின் ஒளியிலே ஏரியின் தண்ணீர், வெள்ளிபோல ஒளி விசிக் கொண்டிருந்தது. ஏரியின் கரையிலே உள்ள பளிங்குச் சிலைகளின் உருவங்கள் நீரிலே பிரதிபலித்தன. கரையிலே அவன் அமர்ந்தான். காதல் கொண்டவனின் நெஞ்சத்திலிருந்து ஊற்றெடுத்தோடும் கற்பனைகளைப் போல, பளிங்குச் சிலைகளின் வாயிலிருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது. அவன் அதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு அழகியின் பட்டுக்கன்னத்திலே இருக்கும் மருவைப் போல சமதரையிலே உயர்ந்து நிற்கும் அழகு மாளிகையைப் பார்த்தான், பார்த்துக் கொண்டே இருந்தான்.

நினைவலைகள், வாழ்வெனும் புத்தகத்திலிருந்து இறந்தகால நிகழ்ச்சிகள் எழுதப்பட்ட, பக்கங்களைப் புரட்டிக் காட்டிக் கொண்டிருந்தன. அவன் அதிலே கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தான். கண்ணீர் அவனது கண்களிலே தேங்கியது. பொருள்களின் தோற்றம் கண்ணீரிலே மறைந்தது. பழைய நாட்களின் நினைவுகள் அவனது நெஞ்சத்திலே துயரத்தை எழுப்பி விட்டன. சொல்லி ஆற்றுவிட்டால் அவனது நெஞ்சம் வெடித்து விடும்போல் இருந்தது. சோகத்தால் இணைந்து நின்ற அவனது உதடுகள் பிரிந்தன. குரல் ஒலித்தது.

"அன்று, நான் ஆடுகளைப் பசும்புற்றரையிலே மேய்த்துக் கொண்டிருந்தபோது, மகிழ்ச்சியும் இன்பமும் என் வாழ்விலே எங்கும் நிரம்பியிருந்தன. என் நெஞ்சத்து மகிழ்வையெல்லாம் குழலின் ஓசையிலே பாட்டாக அமைத்து இசைத்துக் கொண்டிருப்பேன். ஆனால் இன்று நான் பேராசையின் அடிமை. பொருளோடு பொருள் குவிகிறது. நான் பொருளைக் காணக் காண இதயமற்ற உலோபியாகிறேன். எல்லாம், சேர்ந்து என்னைத் துயரச்சேற்றில் ஆழ்த்துகின்றன.

அன்று நான் கீதம் பாடும் வானம்பாடியாய்த் திரிந்தேன். வண்ணச் சிறகடித்துப் பறக்கும் வண்ணாத்திப் பூச்சியாய் இருந்தேன். மென்மலர்களின் சுகந்தத்தை வாரிச் செல்லும் தென்றலென வயல்வெளிகளிலே சுற்றித் திரிந்தேன்.

இன்று, சமுதாயத்தின் சட்டதிட்டங்கள், சம்பிரதாயம் எனும் காவற்கூடத்தின் கைதி நான். மற்றவர்களுக்காக ஆடை அணிந்து அலங்கார மாளிகையில் வாசம் செய்கிறேன். அவர்கள் விருப்பத்திற்காக, எனக்கு வேண்டாததைக் கூடச் செய்ய வேண்டியிருக்கிறது. இனி நான் வாழ்வில் இன்பமே அடைய முடியாதா? செல்வம் என்னைத் துன்பப் பாதையில் அழைத்துச் சென்று சித்திரவதை செய்கிறதே! தங்கம் நிறைந்த மூட்டைகளைச் சுமந்து செல்லும் ஒட்டகம் படும் அவஸ்தையை நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.

பசும்புற்றரையும், சலசலக்கும் ஓடைகளும் எங்கே? மெல்லிய பூங்காற்றும், இயற்கை விரிக்கும் அழகும் எங்கே? அமைதி எங்கே? ஆம்! நான் இவை எல்லாவற்றையும் இழந்துவிட்டேன். என்னிடம் மிஞ்சியிருப்பதெல்லாம் என்னைப் பார்த்துக் கேலிச்சிரிப்பு சிரிக்கும் தங்கக் குவியலும் மாளிகையும்தான்! ஆம்! என் இதயத்தின் அமைதி அந்த மாளிகையின் அஸ்திவாரத்திலே புதைக்கப்பட்டு விட்டது.

சிந்தாமணி, பி. ஏ.

காதலும், தூய்மையும் துணையாக, நிலவின் காவலிலே, அன்று, என் காதலியோடு உலவித் திரிந்தேன். இன்றும் பெண்கள் புடை சூழத் தான் உலவுகிறேன். ஆனால் அவளின் தூய காதலும், அன்பு மொழிகளும் எங்கே! இவர்கள் எங்கே! இன்று என்னைச் சுற்றியிருக்கும் பெண்களின் கண்களிலே காமவெறி தேங்கிக் கிடக்கிறது. பட்டுடைகளுக்காக, அணிமணிகளுக்காக, தங்க நாணயங்களுக்காக, அச்சத்தை மறந்து, கற்பைத் துறந்து, உடலை விற்கும் இவர்கள் இதயத்திலே காதலுக்கு இடமேது!

இளமையிலே சிறுவர்களோடு, மரங்களுக்கிடையே மான்போல ஆடி மகிழ்ந்தேன். புல்வெளிகளிலே, சோலைகளிலே, பாடிக் களித்திருந்தேன். ஆனால் இன்று, ரத்தவெறி கொண்ட புலிகளுக்கிடையே அகப்பட்ட மானாகி விட்டேன் நான். வீதியிலே செல்லும்போது என்னைப் பார்ப்பவர்களின் கண்கள் வெறுப்பைக் கக்குகின்றன. பொறாமைக்காரர்களின் விரல்கள் என்னையே சுட்டிக் காட்டுகின்றன. எங்கு பார்த்தாலும் என்னை வெறுப்பவர்களின் முகங்களையே காண்கிறேன்.

அன்று நான் வாழ்ந்தேன்; அழகைக் கண்டு ரசித்தேன். இன்று இரண்டையுமே இழந்துவிட்டேன். அன்று என்னிடம் மகிழ்வு இருந்தது. ஆனால் வறுமையிலே வாடினேன். இன்று செல்வம் மலையெனக் குவிந்து கிடக்கிறது. மகிழ்விழந்து, செல்வமிருந்தும் ஏழையாய் வாழ்கிறேன். அன்று, கருணை உள்ளம் படைத்த காவலனைப்போல ஆட்டு மந்தைக்கிடையே அமர்ந்திருந்தேன். இன்று, கொடுமையாளனுக்கு முன்னே பல்லிளித்து நிற்கும் அடிமையைப் போலத் தங்கக் குவியலின் முன் நிற்கிறேன்.

செல்வம் என்னிடமுள்ள நல்லெண்ணங்களை, இதய உணர்ச்சிகளை விரட்டிவிடும் என்று கண்டேனில்லை. செல்வம், அறியாமையெனும் இருட்குகைக்குள்ளே என்னைச் சிறை வைக்கும் என்று அறிந்தேனில்லை. மக்கள் எதைப் பெருமையாக நினைக்கிறார்களோ அது துயரத்தையும், அமைதியின்மையையும் தான் தரும் என்பதை உணர்ந்தேனில்லை."

உட்கார்ந்திருந்த அவன் எழுந்து பெருமூச்சு விட்டபடியே மாளிகையை நோக்கி நடந்தான். துயரம் அவனது நெஞ்சை அழுத்திக் கொண்டிருந்தது. மீண்டும் மெல்லிய குரலில் பேசினான்.

"என்னிடம் இருப்பவைகள் உண்மையிலேயே செல்வம் தானா? கோவிலிலே உள்ள கற்சிலையைக் காத்து நிற்கும் பூசாரியைப் போலல்லவா நான் பணக்குவியலைக் காத்து நிற்கிறேன்! வாழ்க்கையை இதற்குத்தான் பணயம் வைக்கிறோமா? ஆம்! பெரும் நிதிக்குவியலால் கூட ஒரு துளி வாழ்வைப் பெற முடியாது. என்னிடம் உள்ள தங்க நாணயங்களை எடுத்துக் கொண்டு உயர்ந்ததோர் எண்ணத்தைத் தருபவர் யார்? என்னிடம் உள்ள வைரக் குவியலுக்குப் பதிலாக தூய காதலைத் தருபவர் யார்? என்னுடைய பொக்கிஷத்தை எடுத்துக் கொண்டு இயற்கையின் அழகை ரசிக்கும் கண்களைத் தருபவர் யார்?"

அவன் தனது மாளிகையின் வாசலுக்கு வந்து விட்டான். நிலவின் ஒளியிலே சுற்றியிருந்த வீடுகளையெல்லாம் ஏக்கத்தோடு பார்த்தான். பணம் பணம் என்று அலையும் மக்களின் நிலையை எண்ணி எண்ணிப் பரிதாபப்பட்டான். பின், "பணத்தைத் தேடி அலையும் மக்களே! நீங்கள் இருளிலே நடந்து சென்று சாவின் நிழலிலே உட்காருகிறீர்கள்! அறியாமையால், தப்பான எண்ணத்தினால் பொருளைத் தேடி அலைகிறீர்கள்! சுவைமிகு கனிகளைச் சாக்கடையிலே எறிந்துவிட்டு, சுவையற்ற தோலையும் முள்ளையும் சாப்பிடுகிறீர்கள். வாழ்வெனும் பூஞ்சோலையை மறந்துவிட்டு, தனிமையான காட்டுப்பாதையிலே ஓடுகிறீர்கள். பட்டு உடைகள் இருக்க, கந்தல் துணிகளை அணிந்து கொள்கிறீர்கள்.

மக்களே! அறிவுத் தீபம் அணையப் போகிறது. எண்ணெய் ஊற்றி அதைச் சுடர் விட்டுப் பிரகாசிக்கச் செய்யுங்கள். பேராசையெனும் பேய்க்குணம் படைத்தவன் அமைதியெனும் திராட்சைத் தோட்டத்தை அழித்து விடுவான். ஆகவே கவனமாய் இருங்கள். மகிழ்ச்சி ததும்பும் உங்கள் இதயப் பொக்கிஷங்களைப் பொருளாசை எனும் திருடன் கொள்ளை கொண்டு விடுவான். ஆகவே விழிப்போடு இருங்கள்."

அப்போது, வறுமையிலே உழன்ற ஏழை ஒருவன், அவ...

— 11-ம் பக்கம் —

ராம் ரேடியோ சர்வீஸ்
டீலர்ஸ் அண்ட் இஞ்சினியர்ஸ்,
புதுக்கோட்டை

PHILIPS

பிலிப்ஸ்

◉ ரேடியோ
◉ ஒலிபெருக்கிக் கருவி
◉ இன்பிராபில் லாம்ப்
◉ பிலி ஷேவிங் செட்

முதலியவைகள் கிடைக்கும்.

★ விழாக் காலங்களில் ஒலிபெருக்கிகள் சிறந்த முறையில் அமைத்துக் கொடுக்கப்படும்.

★ ரேடியோக்கள் ஒலிபெருக்கிகள் முதலியவைகள் மிக நல்ல முறையில் சர்வீஸ் செய்து தரப்படும்.

விவரங்களுக்கு:
ராம் ரேடியோ சர்வீஸ்
தபால் பெட்டி நெம்பர் 2.
கீழராஜ வீதி : : புதுக்கோட்டை

தேர்தல் வருகிறது; தெரிந்துகொள்ளுங்கள்!

8. ப. ஜீவானந்தம்

தன்மான இயக்கத்துத்
தலைவர்களில் ஒருவரென
அந்நாளி லேயிருந்து
ஆர்ப்பரித்தார் அம்மானை !

அந்நாளி லேயிருந்து
ஆர்ப்பரித்தார் என்றாலும்
இந்நாளில் குடல்தெறிக்க
ஏங்குகிறார் அம்மானை !

பொதுஉடைமைப் பூமியிலே
புதுப்பாடம் கேட்டுவந்து
மதமடைமைப் பூமியிலே
வாய்திறந்தார் அம்மானை !

மதமடைமைப் பூமியிலே
வாய்திறந்தார் என்றாலும்
கதியிழந்து தண்டனிட்டுக்
கதறுகிறார் அம்மானை !

காங்கிரசுக் கட்சியது
கயவாளிக் கட்சியென
ஓங்கிஒரு தேர்தலிலே
உறுமினார் அம்மானை !

ஓங்கியந்தத் தேர்தலிலே
உறுமினார் என்றாலும்
தாங்கியதன் காலடியில்
சரணடைந்தார் அம்மானை !

ராமர் கதையினையும்
நால்வேதக் குப்பையையும்
சாமத்தி லேஎழுந்து
தடவுகிறார் அம்மானை !

சாமத்தி லேஎழுந்து
தடவுகிறார் என்றாலும்
நாமத்தார் பொதுவுடைமை
நம்பவில்லை அம்மானை !

அங்கேரிக் கலகமதை
அன்றுடம் புதுவிதமாய்
தங்காத வாதத்தில்
தள்ளுகிறார் அம்மானை !

தங்காத வாதத்தில்
தள்ளுவதும் ஏனென்றால்
இங்கிருக்கும் அவருக்கு
எதுவும் புரியாதால் !

உலகப் பொதுவுடைமை
ஓட்டையாய்ப் போனபின்னும்
விலகிவர முடியாமல்
விம்முகிறார் அம்மானை !

விலகிவர முடியாமல்
விம்மும் இவரோடு
கலகப் பொதுவுடைமை
கரையாதோ அம்மானை !

— கதா.

நேருஜியா அண்ணாதுரையா ?

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

கொள்ளட்டும்'' என்று கம்பீரமாகக் குறிப்பிட்டார்கள். இதுபோல் முன்பு ஒரு தடவை குறிப்பிட்டிருக்கிறார். அதற்கான திராணி சென்னை மந்திரி சபைக்கு இல்லை. ஆனால் ஓட்டுக் கேட்கும்போது மட்டும் கேட்கிறார்கள், நேருஜியா அண்ணாதுரையா என்று. அதே கேள்வியைத் திருப்பிக் கேட்கிறோம். தமிழ்நாட்டு மக்களுக்கு யார் தேவை? அண்ணாவா நேருவா? முடிவு கட்ட மார்க்கமென்ன? தமிழர்கள் மத்தியில் இரு பெருந் தலைவர்களும் ஒரே மேடையில் சந்திக்கட்டும். இந்தக் கருத்தையும், கண்ணியமாக, மறைமுகமாக அண்ணா அவர்கள் அன்றையக் கூட்டத்திலேயே தெரிவித்தார்கள். அமெரிக்க நாட்டில் தேர்தல் வந்தபோது ஒருமுறை ஆபிரகாம் லிங்கன் வாக்காளர்களை நெருங்கி ஓட்டுக் கேட்டாராம்! பொதுமக்கள் அதற்கு "நீங்களும் உங்களை எதிர்த்து நிற்போரும் ஒரே மேடையில் பேசுங்கள். திறமையைப் பார்த்து நாங்கள் முடிவுகட்டிக் கொள்கிறோம்'' என்று சொன்னார்களாம். அண்ணாதுரையா நேருஜியா என்று கேட்பவர்கள் இப்படிப்பட்ட ஆண்மை நிறைந்த காரியங்களை, தன்னம்பிக்கை உள்ள காரியங்களைச் செய்ய முன்வருவதில்லை. நேரு என்றால் மதிப்பார்கள், கௌரவிப்பார்கள், அவரது தொண்டினைப் போற்றுவார்கள். தமிழகத்தில் வந்து நேரு வேண்டுமா அண்ணாதுரை வேண்டுமா என்றால், மக்களை மண் பொம்மைகள் என்று மந்திரிகள் கருதுகிறார்கள் என்றுதானே அர்த்தம்! தேர்தல் காலத்தில் அவர் உயர்ந்தவரா, இவர் உயர்ந்தவரா என்று கேட்பது அரசியல் அற்பத்தனம். நேரு உயர்ந்தவர்தான்! நிறையப் புகழைச் சேர்த்துக்கொண்டவர்தான், வசதி மிகப் பெற்றவர்தான், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டவர்தான். ஆனால் தமிழகத்திற்கு அவர் என்ன செய்தார்? யாரும் விரல் மடக்க முடியாது? இந்த இடத்தில் அண்ணாவுக்கும் நேருவுக்கும் பொருத்திக் காட்டும் ஈடு இணைகளெல்லாம் தவிடுபொடியாகிவிடுகின்றன.

காங்கிரசிலுள்ள பெரும் புள்ளிகள் சிலர் மேடைகளிலே அநாகரிகமாகப் பேசுகிறார்கள். நேருவோடு ஒப்பிட்டுக் காட்டி அவர்களை பேசிவிட்டு, "இந்தத் தி. மு. க.வினர் எத்தனை இடத்தில் ஜெயிப்பார்கள்?'' என்று கேட்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் இதுபற்றிக் குறிப்பிடுகையில், "மேல் நாடுகளில் பெண்களின் வயதையும், ஆண்களின் சம்பளத்தையும் கேட்க மாட்டார்கள். அது அநாகரிகமென அவர்கள் நினைக்கிறார்கள். இந்த நாட்டில் தேர்தலில் ஈடுபடும் ஒரு கட்சியைப் பார்த்து நீங்கள் எத்தனை இடத்தில் ஜெயிப்பீர்கள் என்று கேட்கிறார்கள். எத்தனை இடத்தில் ஜெயிப்போம்! காங்கிரஸ் எத்தனை இடத்தில் தோற்கிறதோ அத்தனை இடத்தில் ஜெயிப்போம்! எங்கே, காங்கிரஸ்காரர்களைக் கேட்கிறேன் நீங்கள் எத்தனை இடத்தில் தோற்பீர்கள்? சொல்லுங்கள்!'' என்று பதில் சொன்னார்கள். அப்போது கூட அண்ணா அவர்கள் நேருவைக் குறைத்துப் பேசிவிடவில்லை. தென்னாட்டின் நிலவரத்தை நேருவுக்குத் தெரியவொட்டாமல் தமிழ்நாட்டு மந்திரிமார் குறுக்குச் சுவராக இருக்கிறார்கள் என்பதையே அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். எத்தனை நாளைக்கு இந்தக் குறுக்குச் சுவர்? ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு உருப்படியான காரியங்களைச் செயல் முறைக்குக் கொண்டுவர வேண்டுமானால் பண்டித நேருவும், அறிஞர் அண்ணாவும் ஒரே மேடையில் பேசவேண்டும். ஒரு பெரிய அரசியல் தலைவர், பலம் பெற்ற ஒரு எதிர்க்கட்சியின் தலைவரைச் சந்திப்பதையும் வாதிப்பதையும் கேவலமென்று கருதமாட்டார். அதுவும் நேரு பண்டிதர் அப்படி நினைப்பவரல்லர். தென்னாட்டின் உண்மை நிலையை விளக்க நேர்மையான ஆங்கிலப் பத்திரிகைகள் இல்லை. தி. மு. க.வைப் பற்றியோ, அதன் தலைவர்களைப் பற்றியோ, உண்மையை எழுதினால் அது தீங்கு பயக்கக் கூடியது என அந்தப் பத்திரிகையாளர்கள் கருதுகிறார்கள். கேவலம்! அவர்கள் சிந்திக்கத் தெரியாதவர்கள்! உண்மையின் உருவத்தை உணர வகையற்றவர்கள்! வாழ்க(!) அவர்களின் வன்நெஞ்சு! ★

முக்கிய அறிவிப்பு

பொங்கல் மலரை முன்னிட்டு ஜன. 6ம் தேதிய இதழ் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஜனவரி 14ம் தேதி எல்லா ஊர்களிலும் தென்றல் மலர் கிடைக்கும்.

ஏஜண்டுத் தோழர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'முல்லை'-தை இதழ், தை மாதம் 10-ம் தேதியன்று எங்கும் கிடைக்கும்.

—நிர்வாகி.



தைமூரின் காதலி

★

தென்னரசு

8

யஜ்தானி தரையிலே சாய்ந்துகிடந்தார். நெற்றி முழுதும் முத்து முத்தாய் வியர்வை துளிர்த்திருந்தது. துயரத்தைத் தாங்கமுடியாதவளாய் மாளிகையின்மேற்கட்டுக்கு ஓடிவிட்டாள் உம்மதுல். தேம்பித் தேம்பி அழுதாள். அது, கூட்டுக்குள் இருந்து மாடப்புருக்கள் முணங்குவது போலிருந்தது.

காற்று குமுறியது. மேகம் தெப்பம்போல் மிதந்துகொண்டு சென்றது. அப்போது அரண்மனையிலிருந்து ஒரு சேவகன் வந்தான். தைமூர் பாதுஷா அபீபைக் கையோடு அழைத்து வரச் சொன்னதாகச் சொன்னான்.

மேலே இருந்த உம்மதுலின் செவிகளில் சேவகனின் குரல் பட்டது. பரபரப்புடன் எழுந்து ஆடையைச் சரி செய்தாள். அவளையுமறியாமல் சோர்ந்து, தளர்ந்து கிடந்த உள்ளத்தை நிமிர்த்திக் கொண்டாள். மண்டலத்தையே உள்ளங்கைக்குள் வைத்துப் பிசைந்துகொண்டிருக்கும் தைமூரின் எதிரே தலைதூக்கி நிற்பதற்கான மனவலிமையை வரவழைத்தாள். அழகிய அராபியக்குதிரையைப்போல் அரண்மனைக்குப் புறப்பட்டாள். மாளிகையின் கடைசிப் படிக்கட்டில் இறங்கும்போது சாய்ந்துகிடந்த தந்தையைத் திரும்பிப் பார்த்தாள். ஓடும் பந்தயக் குதிரையிலிருந்து தவறி விழுந்தவரைப்போல், யஜ்தானி அலங்கோலமாகக் கிடந்தார். மதில்மேல் பூனையென, இரட்டைப் படகில் கால்வைத்த யாத்திரை வாசியென சீமாட்டி சேமியா சித்தங்கலங்கிப் பித்துப்பிடித்தவளைப்போல் அமர்ந்திருந்தாள்.

★

எந்த ராஜன், அரக்கர் படை என்னிடமிருக்கிறது என்று ஆர்ப்பரித்தாலும், அரைக்கணத்தில் அழித்திடுவேன் என முழக்கமிட்டாலும், அவர்களையெல்லாம் இருக்குமிடந்தேடிச் சென்று பார்த்தறியாதவன் தைமூர். 'குறுநில மன்னர்களே ஒன்று திரண்டு வந்தாலும் அவர்களை யெல்லாம் என் குதிரைக்காலில் கட்டி உதைப்பேன்' என்றுதான் அடிக்கடி அவன் சொல்லுவான். கௌரவத்திலே உயிரைவைத்து இறுதி வரை அதைக் கட்டிக் காத்தவர்களில் மிக முக்கியமானவன் தைமூர். அவனே அன்று அபீபைத் தேடி யஜ்தானியின் மாளிகைக்கு வந்தான். அங்கு அபீப் இல்லை. அவன் எதிர்பாராத வகையில் ஒரு அழகான துருக்கியப் பெண் அந்த மாளிகையில் இருப்பதைக் கண்டான். அவள் யார்? இதுவே இப்போது தைமூருக்குச் சிக்கலாகி விட்டது. உலகத்திலுள்ள அழகிய பொருள்களெல்லாம் ஒன்று சேர்ந்து பெண்ணுருக் கொண்டு யஜ்தானியின் மாளிகையில் தோன்றியிருப்பதாகவே அவன் கருதினான்.

"கன்னிப்பெண்தான் அவள். கைபட்ட மலராகத் தெரியவில்லை. இருட்டிலே மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களைப் போலல்லவா அவளது விழிகள் ஒளிவிடுகின்றன. அப்பப்பா! அழகு என்றால் எப்படி இருக்கும்; மற்றவர்களுக்கு இதுதான் அழகு என எப்படிச் சொல்லுவது என்று கேட்பவர்களுக்கு, அவள் ஒரு இலக்கணப் பெண். அபீப் மணமாகாதவனாயிற்றே...!...ஒருவேளை அவனது சகோதரியாக இருந்தால்!" என்று தைமூர் தனக்குத்தானே எண்ணிக் கொண்டிருக்கும் போது அபீப் உள்ளே நுழைந்தான்.

"அபீப்! எங்கெல்லாம் தேடுவது உன்னை! வா, உட்கார்! ஏன் முகத்தில் வாட்டம் காணப்படுகிறது!...ஏதாவது தர்க்கம் செய்திருப்பாய்! யஜ்தானி கோபித்திருப்பார்! அவ்வளவுதானே!...அபீப்! உன்னை வீட்டுக்கனுப்ப எனக்குத் துளியும் விருப்பமில்லை."

"இல்லை பாதுஷா, என் மனம் இன்று நிலையில் இல்லை. அகத்திற்கும் முகத்திற்கும் தொடர்பில்லாமற் காட்டிக் கொள்வதிலே என்னைக் கெட்டிக்காரன் என்பார்கள். ஆனால் இன்று என்னால் என் மனச்சுமையைத் தாங்க முடியவில்லை."—அபீப் பெருமூச்சோடு சொன்னான்.

"சாமர்கண்டுக்கு நீ புதியவன். யாரையும் பழகியிருக்க மாட்டாய். உனக்கென்ன கவலை இப்போது? அரண்மனையில் யாராவது சுடுசொல் வீசிவிட்டார்களா? தைரியமாகச் சொல்! அவர்கள் தலையைக் கொய்து விடுகிறேன். அபீப் உன் கண்கள்தான் இனி எனக்குக் கண்கள்! உன் காதுகளால்தான் இனிக்கேட்பேன். என்ன அபீப்! சம்மதந்தானே! இன்றிலிருந்து நீ என் வஜீர்! ஆமாம் வஜீர்! வஜீர்!" என்று கூவிக்கொண்டே அபீபின் கைகளைப் பிடித்துக் குலுக்கினான் தைமூர். அவனுடைய கைகளில் மென்மை இருந்தது. விரல்கள் பூவிதழ்களாக அவனுக்குப் பட்டன: இது வாள் பிடித்த கரமா? வேல் எறிந்த கரமா? என்றுகூட ஒருகணம் அவன் அசந்து விட்டான்.

சன்றிப் போயிருந்த அபீபின் உள்ளம் தைமூரின் கனத்த குரலொலியில் குளிர் காய்ந்து நிமிர்ந்தது. புதிய தெம்போடு பேச ஆரம்பித்தான் அபீப்.

"நான் தங்களின் அரண்மனையில் தங்குவதும், பொறுப்பேற்பதும் முறையற்றது என்க் கருதுகிறேன்."

"ஏன்? ஏன் அபீப் அப்படிச் சொல்லிவிட்டாய்! யோசிக்க நேரம் கொடுத்தேனே அதற்காக அப்படிச் சொல்கிறாயா?"

"பொருள் நிறைந்த இடத்தில் பணிபுரிந்தால் பொல்லாப்புகளுக்கு உடந்தையாக வேண்டும் பிரபு! எதிரிகள் பெருகிவிடுவர். பொறாமை வளரும்! போட்டிகள் வலுக்கும்."

"உனக்கு யார் எதிரியாக வரப் போகிறார்கள்! குணசாலியை எதிர்ப்பதற்கும், பலசாலியை எதிர்ப்பதற்கும் தகுதியான எதிர் பலம் வேண்டாமா?"

"உண்மைதான் தலைவரே! ஒரு மனிதனைக் கொல்ல மற்றொருவன்தான் வேண்டுமென்பதல்ல! தானே தனக்கு விரோதியாகலாம். தன் நெஞ்சே தன்னைக் கொல்லலாம்!"

"புரியவில்லை அபீப்! திறந்து பேசு! நாம் ஒன்றும் ரகசிய உடன்படிக்கை செய்துகொள்ளவில்லை. ஒளிவு மறைவு வேண்டாம்"—தைமூர் கிண்டிக் கிளறினான்.

"எங்கோ இருந்த நான், தங்களின் தோளுக்கு வந்துவிட்டால்! என்னையுமறியாமலே என் நெஞ்சை அகங்காரம் ஏன் கவ்விக்கொள்ளக்கூடாது? அகங்காரம் கொண்ட நெஞ்சு அந்த அகங்காரத்தாலேயே தான் அழிந்திருக்கிறது. அதனால் தான் பயப்படுகிறேன்...மன்னியுங்கள்."

அபீபின் இந்தப் பதில் தைமூரின் தலையைச் சுழற்றியது.

மறவர் மணிப்புருவின்
மகோன்னதச் சித்திரம்!
வெளிவந்துவிட்டது!
தென்னரசு
எழுதிய
செம்மாதுளை
விலை ரூ. 1-4-0
★
மலர் நிலையம்,
133, பிராட்வே :: சென்னை.

பதில் பேசத் தைரியமில்லை அவனுக்கு. தன் நெஞ்சே தனக்குப் பகைவனாகக் கூடும்-என்று அபீப் ஒரே பிடிவாதமாகச் சொன்னது அவனுக்குப் புதையல் கிடைத்ததைப் போலிருந்தது.

"அபீப், நான் சொல்வதை மறுத்துப்பேசுவதையே நீ உனக்குப் பொழுது போக்காக நினைக்கிறாய்! இந்த வாதம் எனக்குப் பிடிக்கவில்லை அபீப்! புத்திசாலிகள் கோழைகளாக இருப்பதால் தான், 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற தத்துவத்தை எதிர்ப்பதற்கும் நாட்டிலே நாதியற்றுப் போகிறது. அபீப், நான் திருந்த விரும்புகிறேன்; மனிதனாக ஆசைப்படுகிறேன்; ரத்தத்தை வெறுக்கத் துடிக்கிறேன்! ஆனால் நீயோ உன்னைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறாய்! உன்னுடைய எதிர்காலத்தைப் பற்றியே கவலைப் படுகிறாய்! உலகம் உய்ய நீ சொன்ன உபதேசங்களெல்லாம் முலாம் பூச்சுத்தானா அபீப்! உன்னால் மிருக குணம் அழியத் தயாராக இருப்பதை நீ வரவேற்க மாட்டாயா? இந்தத் தைமூர், தைமூராக வாழ்ந்துவிட்டுப் போகட்டும் என்று நினைக்கிறாய்! நான் திருந்தாவிட்டால் உலகிற்கே ஆபத்து! என்ன சொல்லுகிறாய்! இந்த ராஜ மகுடத்தை உடைத்தெறியட்டுமா? இந்த ராஜாங்கத்தையே கலைத்து விடட்டுமா? என்னோடு பேசினாலே எதிரிக்கு அந்தஸ்து வளர்ந்துவிடும் என்று கோட்டைச் சுவர்களுக்குள்ளே இருக்கும் நான், கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். இனம் தெரியாத ஒரு இளைஞனிடம் தைமூர் மயங்கிக் கிடக்கிறான் என்பதை எந்த மன்னனும் நம்பமாட்டான். ஆனால் அது உண்மை. அபீப்!" தைமூரின் பேச்சிலே நாதமிருந்தது. பராக்கிரமம் பெற்ற தைமூர், பால் மணம் மாறாத ஒரு இளைஞனிடம், விடுவிக்கக் கோரும் குற்றவாளிபோல் பேசினான்.

அபீப் மவுனமாக இருந்தாள். ஒருவேளை தைமூருக்கு தனது வேட ரகசியம் தெரிந்து விட்டதோ என்று பயந்தாள். பலி வாங்கும் திட்டத்தின் ஆரம்ப வேலைதான் இந்த நாடகமோ என்று ஐயப்பட்டாள்.

'என்ன அபீப், பதில் பேச மறுக்கிறாய்? என்னிடம் இருக்க உனக்கு விருப்பமில்லை. என்னைத் திருத்த உனக்கு நேர்க்கமில்லை. வல்லூறை வெண்புறாவாக்கும் நல்லெண்ணம் உன் நெஞ்சிலிருந்து பிரிந்து போய் விட்டது. சரி; பணிவுக்கு மதிப்பில்லை என்ற, நான் மாடோட்டியாக இருந்தபோது கண்ட உண்மையே மேலானது. வலிமையால் பெறும் உரிமையே உத்தமமானது. வருகிறேன் அபீப்! புதிய சினேகிதன் நீ! புதிய சினேகிதனாகவே போக விரும்புகிறாய்!" தைமூரின் முகத்திலே சோகம் படர்ந்தது. கோட்டையை இழந்தவனைப் போல் எதிரிப் படையைத் தாக்கத் திட்டமில்லையே என ஏங்குபவ

— 10-ம் பக்கம் —

> " போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதோரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 3 ‖ 29—12—56 ‖ இதழ் 18

காங்கிரஸ் பணக்காரர்கள்!

காங்கிரஸ் தலைவர்கள், மந்திரிகள் தமிழகத்தில் இப்போது மூலை முடுக்குகளிலெல்லாம் முழங்கிக்கொண்டிருக்கிறார்கள். தேர்தல் பற்றிய 'ஆலாபனம்' ஊருக்கு ஊர் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

காங்கிரஸ்தான் நாட்டையாளும் தகுதி பெற்றிருக்கிறது என்கிறார் ஒரு அமைச்சர்.

வேறு எந்தக் கட்சிக்கும் எதிர்க்கட்சியாக இருக்க யோக்யதை இல்லை; காங்கிரஸ் கட்சிக்குத்தான் அந்தத் தகுதியும் உண்டு என்கிறார் இன்னொரு அமைச்சர்.

நேர்மையோடு தேர்தலை நடத்தி முடித்துவிடுவோம் என்கிறார் வேறொரு அமைச்சர்.

ஆனால் காமராசரோ, "தேடித் தேடிப் பார்க்கிறேன் காங்கிரசிலே ஒரு பணக்காரரைக்கூடக் காணவில்லையே" என்கிறார். காங்கிரசிலே பணக்காரரைக் காணவில்லையாம்! தேடித் தேடிப் பார்க்கிறாராம்! பணக்காரர்கள் காங்கிரசிலே இருக்கிறார்களா இல்லையா என்பது பிறகிருக்கட்டும்! காமராசர் ஏன் பணக்காரர்களைத் தேடித் தேடிப்பார்க்கவேண்டும்? முதலில் அதை அவர் நமக்குத் தெரிவிக்கட்டும்! காமராசர் பணக்காரர்களைத் தேடிப் பார்க்க வேண்டிய அவசியம் என்ன வந்துவிட்டது!—வெளிப்படையாகச் சொல்லுகிறார் காங்கிரசிலே பணக்காரர்கள் இல்லையென்று!

சாக்கடையில் கொசுக்கள் இல்லை

கள்ளில் நாற்றமில்லை

—என்று சொன்னால் கூட நம்பலாம். ஆனால் காங்கிரசில் பணக்காரர்கள் இல்லையென்றால் எவர் நம்புவர்!

ராஜா முத்தையா செட்டியார்
ராமநாதபுரம் ராஜா
டி. டி. கிருஷ்ணமாச்சாரி
டாக்டர் சுப்பராயன்
அழகிய சுந்தரம் செட்டியார்
என். எம். ஆர். சுப்பராமன்
குன்னியூர் சாம்பசிவ அய்யர்
வி. எஸ். தியாகராச முதலியார்

—இவர்களெல்லாம் யார்? இவர்களை யெல்லாம் ஏழை என்று சொன்னால்கூட சினம் பெற்றுச் சீறிப் பாய அல்லவா நினைப்பர்! காங்கிரசில் பணக்காரர்கள் இல்லையாம்! ஒருவேளை, காமராசர் காங்கிரசிலே பணக்காரர்கள் இல்லையென்று சொல்லுவதற்குக் காரணம், மேலே குறிப்பிட்டவர்களை யெல்லாம் காங்கிரசிலே உள்ள சாதாரணப் பணக்காரர்களாகக் கருதி இவர்களைக் காட்டிலும் பெரிய பணக்காரர்களைத் தேடிக்கொண்டிருக்க வேண்டும், அல்லது பணக்காரர் என்றால் யார், அவர்களுக்குச் சொத்து எவ்வளவு இருக்க வேண்டும் என்பது காமராசருக்குப் புரியாமலிருக்க வேண்டும்.

மேலும், காமராசர் இவ்வாறு பேசியிருப்பதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. தமிழ்நாட்டில் காங்கிரஸ் அபேட்சகர்களாக நிற்பதற்கு இன்னும் சில தொகுதிகளில் சரியான ஆட்கள் கிடைக்கவில்லை என்று பேசிக் கொள்ளப்படுகிறது. இதுவரை காங்கிரசைப் பற்றித் தெரிந்து கொள்ளாதவர்களைக் கூட அணுகி 'நீங்கள் காங்கிரஸ் சார்பிலே போட்டி யிடுகிறீர்களா' என்று கேட்கிறார்களாம்! ஆகவே, காங்கிரஸ் கட்சியிலே பணக்காரர்கள் இல்லையென்று சொன்னால் எதிர்க்கட்சிக்காரர்கள் விளம்பரமில்லாத காங்கிரஸ் பணக்காரர்களின் பெயர்களை வெளிப்படுத்துவார்கள் என்று காமராசர் எதிர்பார்க்கக்கூடும். மொத்தத்தில் காங்கிரஸ் கட்சியைத் தூக்கி நிறுத்துவதற்கு இப்போதிருக்கிற பணக்காரர்கள் போதவில்லை, இன்னும் தேவைப்படுகிறது என்பது புலனாகிறது. அப்படியானால் இப்போது இருக்கிற காங்கிரஸ் பணக்காரர்கள் யார்? பொறுத்திருந்து பாருங்கள்! காங்கிரஸ் அபேட்சகர்கள் பட்டியல் வரும்! அவர்கள்தான் தமிழ்நாட்டுப் பணக்காரர்கள்! இது நூற்றுக்கு நூறு உண்மை!

பேராசிரியர் முழக்கம்

டிசம்பர் 21-ந்தேதி அன்று அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற தமிழிசை விழாவில், தலைமை தாங்கிய டாக்டர் மு. வரதராசனார் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.

"பழங்கால நாகரீகத் துறைகளை ஆராய விரும்பும் அறிஞர் எவரும் இந்திய நாட்டை மறக்க முடியாது. அவற்றுள், பழங்காலக் கலை வளர்ச்சியை ஆராய விரும்புவோர் தென்னிந்தியாவையே நாடி வரவேண்டும். ஆயிரத்திருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இசைக்கலை வளர்ச்சியைப் பற்றி அறிய விழையும் எந்த நாட்டு அறிஞரும் தமிழ்நாட்டு இசைச் செல்வத்தையே நாடவேண்டும். இசைத்துறையில் தமிழ்நாடு இத்தகைய பழமைச் சிறப்புப் பெற்றுள்ளது. தமிழர்கள் தம் மொழியை வழி வழியாகப் போற்றிக் காத்து வந்துள்ளனர். அதனால்தான், இன்று கி. பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்த பரிபாடலிலும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த சிலப்பதிகாரத்திலும் இசை பற்றிய குறிப்புக்கள் நிரம்பியிருத்தலைக் காண்கிறோம். பழந்தமிழ் நூல்கள் யாவற்றிலும், கலைச் செல்வக் குறிப்புக்கள் தந்து அறிஞர்க்குப் பெரு வியப்பூட்டுவதில் சிலப்பதிகாரம் இணையற்றதாகும். அதன் உரையாசிரியர்கள் தந்துள்ள விளக்கங்கள் ஆராய்ச்சியாளர்க்கு அரிய கருவூலங்களாக உள்ளன.

திரு. வீணை எஸ். இராமநாதன் அண்மையில் அரிதின் ஆராய்ந்து வெளியிட்டுள்ள 'சிலப்பதிகாரத்து இசை நுணுக்க விளக்கம்' என்னும் நூலைக் கண்ணுற்றபோது, தமிழ் முனிவரான இளங்கோவடிகளின் இசைப் புலமையை எண்ணி எண்ணி வியந்தேன்.

இந்நூலின் உரையில் அடியார்க்கு நல்லார் விளக்கிய 103 தமிழ்ப் பண்களைப் பற்றி இன்று அறிவோர் எத்தனை பேர்? அந்தத் தமிழ்ப் பண்கள் பிற்காலத்தில் படிப்படியே மறக்கப்பட்டன. தேவார காலத்திலும் அந்தப் பண்கள் இருந்தன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமிழ்ப் பண்களிலேயே தம் தம் பக்திப் பாடல்களைப் பாடியருளி திருநீலகண்ட யாழ்ப்பாணருடைய குடும்ப வழி வந்த பாடினி என்ற கலைச் செல்வி வகுத்து உதவிய முறைப்படி தேவாரத்தில் இன்று 24 பண்கள் உள்ளன. அவற்றை இன்று வரையில் விடாமல் பாடி வருபவர் ஓதுவார் மரபினர். அவர்கள் வழி வழியாகக் கற்றுப் பாடிக் காத்துவரும்முறை இன்று நம் ஆராய்ச்சிக்குப் பேருதவியாக இருந்து வருகிறது. ஆயினும் ஒரு குறை உள்ளது. காந்தாரம், பியந்தைக் காந்தாரம், கொல்லி, கொல்லிக் கௌவாணம் என்னும் நான்கு பண்களைப் பற்றிய ஆராய்ச்சியில் நான்கும் நவரோக ராகத்தில் பாடப்படுதல் அறிகின்றோம். நான்கும் தனித்தனிப் பண்களாகத் தேவாரத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த நான்கு தேவாரப் பண்களையும் ஓதுவார்கள் ஒரே இசையில் பாடுகிறார்கள். இவ்வாறு பாடுவதைக் கேட்கும்போது, இடைக்காலத்தில் அவர்களையும் கடந்து சில திரிபுகள் ஏற்பட்டிருத்தல் கூடும் எனக் கருதத் தோன்றுகிறது.

பழைய பண்களின் பெயர்கள் மறக்கப்பட்டன. நைவளம் என்னும் தமிழ்ப் பண்ணின் அழகிய பெயர் மறக்கப்பட்டு, நாட்ய பாஷா ஆகி, அதுவே பிறகு நட்டபாடை என்ற பெயருடன் வந்து சேர்ந்தது போல், பண்களின் பெயர்கள் மறக்கப்பட்டு, ராகங்கள் வந்து சேர்ந்தன. அதனால் பிற்கால ராகங்கள் பழைய பண்களிலிருந்து வளர்ந்து அமைந்தவைகளே என்னும் உண்மையும் புறக்கணிக்கப்பட்டது. கருநாடக இசை என்பது புதிதாக முளைத்த ஒன்று போலவும், இந்நாட்டுக்கு வேறான ஒன்று போலவும் கருதப்படலாயிற்று. இவ்வாறு நேர்ந்த தவறுகளை-குற்றங்களை - களையும் பொருட்டுத் தோன்றிய இயக்கமே தமிழிசை இயக்கமாகும். கருநாடக சங்கீதம் என்பது தமிழிசைக்குப் பிறர் வைத்த பெயரே என்று உணர வேண்டும்.

தமிழரின் பரம்பரைச் சொத்தாகிய இத்தகைய கருநாடக இசை இன்று தமிழ் மக்களின் வாழ்வில் நெருங்கிய உறவு கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் என்ன; கருநாடக இசை என்றால், தெலுங்குப் பாட்டுக்கள் என்ற அளவிற்கு நாட்டில் ஏற்பட்டுள்ள ஒரு மயக்கமே ஆகும்.

இசையரங்குகள் போற்றத்தக்க வகையில் திருந்தி வருகின்றன. ஆனால், திருந்தாத நிலையம் ஒன்று இன்றும் இருந்து வருகிறது. வானொலி நிலையம் சென்னையிலும் திருச்சியிலும் ஓயாமல் தமிழல்லாத பாட்டுகளை நிரப்பி வருகிறது."

தேர்தல் நாடகம்

(௨)

தமிழகம்-அன்றும் இன்றும்

காட்சி : 3

பின். திரை : சோலை

[பொன்னிக்கரையின் சோலையில் தம்பியொடும் நிற்கிருள், தையல் தாழை. குளித்துவிட்டு வந்த நிலை. சற்றுத் தூரத்தில் நிற்கிருர் வில்லாளர்.]

வில் : (தனி மொழி) புலர்ந்து புலராப் பொழுதனையாள்-மலர்ந்து மலரா மலரனையாள்! அன்று கண்ட அதே மாது! ஆகா! விழிபூத்ததோ; விழியில் மலர் பூத்ததோ! "இலையின்றிக் கொடியின்றிக் கூந்தல் ஏறி எப்படித்தான் பூத்ததிந்த வெண்பூமுத்தம்!" பேசலாமா? பித்தன் என்று எண்ணி விட்டால்!

[இப்போது, வில்லாளரைக் கவனித்த தாழை, மெல்லத் தன் தம்பியைப் பார்த்து]

தாழை : தம்பி! நீ நீராடவில்லையா?

தம்பி : நான் பிறகு நீராடுகிறேன். அதோ அங்கு யாரோ ஒருவர் போராடுகிருர். அவர் போகட்டும் முதலில் பிறகு நான் நீராடச் செல்கிறேன்.

தாழை : சீ! அவர் யாரோ! அவர் நின்ருல் நமக்கென்ன! நீ போய் நீராடு!

தம்பி : சரி சரி! நானென்ன காவல்! போகிறேன்.

[தம்பி போகிருன். உடனே, அதைப் பார்த்த வில்லாளர், தன்னைச் சரிப்படுத்திக்கொண்டு, தொண்டையைக் கனைத்துக்கொண்டு பாடுகிருர்.]

வில் : (பாட்டு)

கன்னிப்பருவத்திலே-அருகில்
காவலுமில்லாமல்
தன்னந் தனியிடத்தே-உலவும்
தையல் அழகு கண்டேன்!
கண்ணைப் பறிக்குதம்மா-மனதில்
கற்பனை ஊறுதம்மா!
எண்ணக் குவியலிலே-அழகு
ஏறித் தழுவுதம்மா!
சித்திரப் பூம்பொழிலில்-தவழும்
சின்னச் செடிகளெல்லாம்
புத்தமுதக் கனியாள்-இடையில்
பொங்கிக் குலவுதம்மா!
தங்கம் ஒளி இழக்கும்-பருவத்
தாழை அழகினிலே...

[என்றதும், 'தாழை' என்பது தன்னைச் சுட்டியதே என எண்ணிய தாழை...]

கண்ணதாசன்

தாழை : நிறுத்துங்கள்.

வில் : ஏனம்மா? இசையில் நயமில்லையா, எடுப்புச் சரியில்லையா?

தாழை : தாழை என்றழைத்தது யாரை?

வில் : (வியந்து) மலரை!

தாழை : உம்......மலரை! இரு பொருள்பட என் பெயரைச் சொன்னீர்!

வில் : உன் பெயர் அதுதானு! வாழ்க! கேட்க நினைத்தேன்; கேளாமலே கிடைத்துவிட்டது விடை!

தாழை : (கோபம் மாதிரி) யார் நீங்கள்?

வில் : ஊர் உறந்தை; பேர் வில்லாளன்!

தாழை : வந்த காரியம்?

வில் : வந்தபோது சொந்தக் காரியம்! வந்த பிறகு இந்தக் காரியம்!

தாழை : குறும்பாகப் பேசுகிறீர்!

வில் : நான் பெண்ணல்லவே, கரும்பாகப் பேச!

தாழை : என்ன வேண்டும்?

வில் : சொல்லித் தெரிவதா காதல்?

தாழை : (வியந்து) காதலா?

வில் : ஆகா! அப்படிக் கூப்பிடு. காதலனை, காதலா என்று அழைப்பது முறைதான்.

தாழை : கணக்காயர் பிள்ளையோ, சுருக்கமாக நெருங்குகிறீர்!

வில் : விளக்கமாகப் பேசுவது வீண் வேலையல்லவா? கண்ணிற் பட்ட கன்னியர் அனைவரிடத்தும் காதல் பிறப்பதானுல், ஒவ்வொருவரிடத்தும் விளக்கம் தேவை. உன்னைத்தான் கண்டேன்; நான் நீயாக மாறினேன்! உண்டா இல்லையா? தெரிந்தால் போதும்.

[தாழை நாணம்]

நாணம் தலையைக் கவிழ்க்கிறது! நல்விசை மெல்லியலே! உன்னை நான் விரும்புகிறேன்; என்னை நீ......?

தாழை : நீங்கள்...நீங்கள்.

வில் : தப்பி நடந்ததில்லை; தவறு புரிந்ததில்லை; பொல்லாங்கு விளைத்ததில்லை; புறமுதுகிட்டதில்லை!

தாழை : தமிழ் நெறியைப் பிறர் பழித்தால்—?

வில் : தலைவாங்கத் தவறமாட்டேன்.

—தாழை நிமிர்கிருள்; பார்க்கிருள்—
—அவனும் பார்க்கிருன்—
—தன்னையறியாமல் நெருங்குகிருன்—
—அவளும் நெருங்குகிருள்—

வில் : ஓவியமே!

தாழை : பெருமானே!

வில் : தாழை! இனி நம் வாழ்க்கை வாழையடி வாழை!

—தழுவுதல்—

[இப்போது, நீராடி முடித்த தம்பி வந்தபடி...]

தம்பி : முடிந்தது! முடிந்தது! காரியம் முடிந்தது!

[இருவரும் விலகல்]

நான் போட்ட கணக்குத் தப்பாது! ஆகா பொன்னிக் கரையே! உனக்கு என்ன பெருமை! அக்கா! அப்பா விடம் நான் சொல்கிறேன்! வா...

வில் : மைத்துனரே!

தம் : அத்தான்!
[சிரிப்பு]

—திரை விழுகிறது—

(தொடரும்)

மனம் போல வாழ்வு

ஆ! சூடாமணியா! என்னடா இது! எதிர்பாராத பேரிடிகள் எங்கெங்கிருந்து வருகின்றன! சரசு எங்கே, சூடாமணி எங்கே! அவனை இவள் ஏன் கொல்ல வேண்டும்! ஒருவேளை இது வேறு சூடாமணியோ? - நகரில் நடந்த கொலையை ரயிலடியில் அறிந்த தேசானந்தருக்கு, மூளைக் குழப்பம் ஏற்பட்டுவிடும்போல் இருந்தது. சிறையிலிருந்து வந்தது முதல் அவருக்கு ஓய்வு ஒழிவே இல்லை. மேலூருக்கும் சென்னைக்கும் ஏதாவதொரு வேலையாக அலைந்துகொண்டே இருந்தார். அப்போது, தங்கையைக் கண்டுபிடிக்க வந்த அவருக்கு இந்த இடி! தான் நிற்கும் இடம் எது என்பதே அவருக்குப் புரியவில்லை. அவ்வளவு அதிர்ச்சி! தன் நினைவின்றி நடந்தார்.

பழையபடியும் அதே வாடகைக்கார் - ஓட்டல் தொல்லை! ஓட்டலுக்குப் போன தேசானந்தர், போனதும் போகாததுமாக படுக்கையில் சாய்ந்துகொண்டு யோசித்தார். முதல் முதலில் கொலை செய்தது நம் தங்கை சரசுதானா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அவள் தான் என்று தெரிந்துவிட்டால், பிறகு அவளைப் பூட்டியிருக்கும் சிறைக்குச் செல்ல வேண்டும். அங்கே சென்றுவிட்டால் அத்தனை விவரமும் தெரிந்து கொள்ளலாம்.-இப்படியோசித்த தேசானந்தர் எழுந்து குளித்தார்.

அவர் மனம் ஒரு நிலையில் இல்லை. உலகத்தை எண்ணி எண்ணி அவர் மிகவும் வருந்தினார். இதுவரை நாட்டுக்காகத் தான் பட்ட தொல்லைகூட பொருளற்ற தொல்லையென்றே அவருக்குப் பட்டது. பொதுவாழ்வில் அக்கறையும் மனித சமுதாயத்தைக் கடைத்தேற்றுவதிலே ஈடுபாடும் கொண்டவர்கள் நிம்மதியாக வாழமுடியாது. நான்கு பிள்ளைகளையும் ஒரு மனைவியையும் அங்கமாகக் கொண்டு இயங்குகிற ஒரு குடும்பத்தை நடத்திச் செல்வதிலே கூட ஒரு குடும்பத் தலைவனுக்கு ஏராளமான பொறுப்புகள் உண்டு. ஒரு குடும்பத்தை நடத்துவதற்கே அவ்வளவு பொறுப்புகள் என்றால், கோடிக் கணக்கான குடும்பங்களை அங்கங்களாகக் கொண்ட நாட்டை நடத்திச்செல்ல நினைப்பவனுக்கு எவ்வளவு பொறுப்புகள் உண்டு! மனிதன் தானாக வருவித்துக்கொள்ளும் தொல்லை தான் பொதுப்பணி என்பது. அதில் ஈடுபட்டவன், தனது சராசரி வாழ்வைச் சுற்றியுள்ள நண்பர்களையும் உறவினர்களையும் விட்டுவிட்டுப் போக முடிவதில்லை. அவர்களுக்காகவும் துயர்ப்பட்டு ஆகவேண்டும். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தான் தேசானந்தர் இருந்தார். ஒரு நாளில் ஒருமணி நேரமாவது முழு நிம்மதியை அவர் பெற்றதில்லை. காந்தியடிகளைச் சிறையிட்டாலும், காங்கிரசுக்காரர்களைத் தடியால் அடித்தாலும், ஏதாவது ஒரு ஊரில் '144' போடப்பட்டாலும், ஏழை மக்கள் பசி என்று பதறினாலும், பாலில்லாக் குழந்தைகள் கதறி அழுதாலும், மனைவி கண்ணீர் வடித்தாலும், மகன் ஊர் சுற்றினாலும், தங்கை காணமற் போனாலும், எங்கே எது நடந்தாலும், எல்லாவற்றிலும் ஈடுபாடு கொண்டுள்ள மனிதன், தான் கலங்க வேண்டியிருக்கிறது.

“உலகம் மாயம், வாழ்வு மாயம்” என்று வீட்டை விட்டு ஓடிய துறவிகள், கையாலாகாதவர்கள் என்று சொல்வதற்கில்லை. நடைமுறை உலகம் அப்படிப்பட்டது. பிறர் சிரித்தால் நாம் சிரிக்கலாம்; பிறர் அழுதால் நாம் அழலாம். பிறர் சிரிக்கும் போது நாம் அழத்தான் நேருமென்றால் தொல்லை பிடித்த இந்த உலகத்தைத் துறந்துவிட்டு ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை! நியாயங்களை மதித்து நடக்கின்ற மனப்பண்பு தொண்ணூறு சதவிகித சமுதாயத்துக்கு இல்லை. அதனால்தான் கட்சித் தலைவர்களின் ஆசைகளில் பல, கனவுகளாகவே போய் விடுகின்றன.

13

தேசானந்தர் எவ்வளவோ ஆசைகள் வைத்திருந்தார். இந்த நாட்டை எப்படியெப்படியெல்லாமோ சமைக்கவேண்டும் என்று திட்டங்கள் போட்டிருந்தார். அவர் போட்ட திட்டங்களில் எதுவும் உருப்படவில்லை. அவரது சராசரி வாழ்க்கைகூட, சரியாக நடக்கவில்லை. அதை எண்ணும்போது, மனித வாடையே இல்லாத ஏதாவது ஒரு பகுதிக்குப் போய்விட மாட்டோமா என்ற எண்ணங்கூட அவருக்குத் தோன்றிற்று.

★

சிறையிலே அடைபட்டுக் கிடந்தாள் சரசு. இப்படி ஒரு நிலை தனக்கு வருமென்று அவள் கனவு கூடக் கண்டதில்லை. ஒவ்வொரு விநாடியையும் கண்ணீரிலேயே கழித்தாள். பெண்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த அந்தச் சிறை வரிசையில் ஏறக்குறைய அறுபது பெண்களுக்கு மேல் இருந்தார்கள். அந்தப் பெண் குற்றவாளிகளைக் கண்டு அவள் பயந்தாள். பொல்லாதவர்கள் மட்டுமே சிறைக்கு வருவார்கள் என்று அவள் எண்ணியிருந்தாள். அதனால் அந்தப் பெண்களில் யாரைக் கண்டாலும் அவளுக்குப் பயமாயிருந்தது. பல பேர் அவளிடம் நெருங்கி வந்து பேசினார்கள்.

“ஏம்மா! பிள்ளையைக் கொன்னியா, புருஷனைக் கொன்னியா?” என்று கேட்டாள் ஒருத்தி.—அவள் புருஷனைக் கொன்றவள்!

“ஏம்மா! நகையைக் கழட்டினியா” என்று கேட்டாள் ஒருத்தி!—அவள் அந்தக் குற்றத்திற்காக வந்தவள்.

யாருக்கும் பதில் சொல்லவில்லை சரசு. அந்தப் பெண்களின் கேள்விகளிலிருந்து, குற்றம் செய்யாதவர்கள் சிறைக்கு வரமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டாள். சட்டத்திலே உள்ள மகத்தான ஓட்டை ஒன்றை அவள் அறியமாட்டாள்! எந்த நிரபராதியையும் கொஞ்சநாள் சிறை வைக்க போலீஸ்காரர்களால் முடியும். இவன் நிரபராதி என்று தீர்மானிக்கப்படுவது கைது செய்யப்பட்ட பல நாட்களுக்குப் பிறகுதான். அதுவரைக்கும் ‘ரிமாண்ட்’ என்கின்ற பேரிலே சிறைக்கூடம் யாரையும் அழைத்துக் கொள்கிறது. இந்த இழுக்கிலிருந்து சட்டத்தை விடுவிக்க சட்ட நிபுணர்கள் இதுவரை எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. பத்து நாள் ரிமாண்டில் இருந்த ஒருவனை நிரபராதி என்று பதினோராவது நாள் நீதிபதி விடுதலை செய்கிறாரென்றால், அந்தப் பத்துநாள் அவன் சிறையிருந்

கண்ணதாசன்

ததற்கு யார் காரணம்? போலீசார்! ஒரு அப்பாவியைச் சிறை வைத்ததற்காக, பிறகு அவர்கள் மேல் ஏதாவது வழக்கு உண்டா? கிடையாது!

சரசு நிரபராதியா? பயங்கரமான குற்றம் புரியத் தொடங்கிய ஒருவனை அவள் கொன்றாள். கொல்ல வேண்டுமென்ற எண்ணம் அவளுக்கில்லை. என்றாலும் அவள் செயல் கொலையில் முடிந்தது. அந்தக் கொலை சட்டப்படி குற்றமாக இருக்கலாம்: ஆனால், சட்டம் தர்மத்திற்குக் கட்டுப்பட வேண்டும் என்று கருதுபவர்களின் கண்களில் அவள் நிரபராதிதான். “தன்னைக் கொல்ல வந்த பசுவையும் கொல்லலாம்” என்கிறது ஆத்திக தர்மம். ஆத்திகர் அல்லாதவர்களுக்கும் இது விலக்கல்ல. தன்னைக் காத்துக் கொள்ள இன்னொருவனைக் கொல்லத்தான் வேண்டுமென்றால், அந்தக் கொலையை அங்கீகரிக்க வேண்டியதுதான் சட்டத்தின் தர்மம். ஆனால் துர்ப்பாக்கிய

— 8-ம் பக்கம் —

★ அர்த்தமற்ற போக்கு ★

அரசியலாரின் அதிசய மூளையில் சில சில சமயங்களில் அபார யோசனைகள் ஏற்பட்டு வருகின்றன.

உருப்படாத ஓராயிரம் உத்தரவுகளை வெளியிடுவதே அரசியலாரின் தனிக் கொள்கையாக இருந்து வருகிறது. இந்த மாதிரி நிலைமை நீடித்தால் உண்மையிலேயே மக்கள் எந்த ஒரு செயலையும் செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டுவிடும்.

தான்தோன்றித் தனமாகவும், தனக்கு மிஞ்சியவர்கள் யாரும் இல்லை என்ற எண்ணத்தாலும் மாநில சர்க்கார் மட்டரகமான செயல்களைச் செய்துவருகிறது. கருத்துக் குருடான இந்த மாநில சர்க்காரை நம்பிக்கொண்டு வாழுகிற நிலைமை மக்களுக்கு இருக்கிறதை எண்ணும்போது மனம் வருத்தம் அடைகிறது.

முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்புப் பாடப் புத்தகங்களில் தேசிய கீதமான 'ஜனகணமன' கட்டாயம் பிரசுரம் செய்யப்பட வேண்டும் என்ற ஒருஉத்தரவை அரசியலார் பிறப்பித்திருக்கிறார்கள்.

அவிநாசியார் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில்கூட 'ஜனகணமன'கட்டாயம்செய்யப்படவில்லை. திரு. சுப்ரமணியனார் கல்வி அமைச்சராக இருக்கும் இந்த நேரத்தில்தான் இந்த இழிநிலை ஏற்பட்டிருக்கிறது.

முதலாவது வகுப்பிலிருந்து ஐந்தாவது வகுப்புவரை உள்ள பள்ளிக்குழந்தைகளுக்கு பெரும் பாலும் பாடங்கள், படங்களின் மூலமாகவும், வேறு பல முறையாலும் விளக்கப்படும். மனோ தத்துவ உண்மை என்னவென்றால் குழந்தைகளுக்குச் சந்தேகம் ஏற்படும்படியான எதுவுமே பாடப்புத்தகங்களில் இருக்கக் கூடாது. அம்மா, அப்பா, பாப்பா, தாத்தா என்பவர்களையே சித்திரம் போட்டு விளக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கின்ற பிள்ளைகளுக்கு, 'ஜனகணமன'வைக் காட்டுவது வேடிக்கையாக இருக்கிறது. உண்மையிலேயே மனோ தத்துவம் தெரியாதவர்களும், குழந்தை உள்ளங்களின் கூறுபாடு அறியாத கோமாளிகளும் தான் இன்றைய ஆட்சியில் இருக்கிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு எந்த உதாரணம் வேண்டும்?

குழந்தைகளின் புத்தகங்களிலே 'ஜனகணமன' இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? இல்லையே என்று குறையா பட்டுக்கொள்ளுகிறார்கள்?

அவிநாசியாரின் 'தொண்டு' நடைபெற்றுக் கொண்டிருந்த போது கூட விலக்கு இருந்தது. விரும்பினால் 'ஜனகணமன' போடலாம். அல்லாவிட்டால் 'வாழிய செந்தமிழ்' என்று துவங்கும் பாரதியாரின் பாடலைப் போடலாம் என்ற ஒரு விலக்கு இருந்தது. இப்போது 'ஜனகணமன'தான் போடவேண்டும். என்று கட்டாயப்படுத்துகின்றார்கள் அரசியலார்.

புரிகிற தமிழ் வேண்டாமாம்! புரியாத இந்திதான் வேண்டுமாம்! பொறுப்பற்றவர்களும், சுயநலக்காரர்களும் நிறைந்துள்ள ஆட்சியிலே தமிழுக்குப் புறக்கணிப்பு-இந்திக்கு ஆதரவு!

உருப்படாத யோசனைகள் இந்த அரசியலாரின் 'இரும்பு மூளையிலே' உதயமாவது புதிதல்ல! ஆனால், சிறுவர்களின் பிஞ்சு உள்ளங்கள் சந்தேகச் சூறாவளிக்குச் சிக்கிச் சிதைகின்ற நிலைமை ஏற்படுவதை எண்ணித்தான் வருந்துகிறோம்.

'ஜனகணமன' என்ற வார்த்தையைப் பையனால் படிக்க முடியாது. அப்பாவையோ, அம்மாவையோ படிக்கச் சொல்வான். அவர்கள் 'ஜனகணமன' என்று வாயைத் திறந்தவுடனேயே பையன் பயந்துவிடுவான். புத்தகத்தைத் தொடக்கூட மறுத்து ஓடிவிடுவான்.

அரசியலார் செய்யும் 'திருத்தொண்டில்' இதுவும் ஒன்று. அரசியலார் தங்கள் கோமாளித்தனத்தை எப்போது ஒழிக்கப் போகிறார்களோ, தெரியவில்லை!

சென்னை மாநில சர்க்காரின் அடிமைப் புத்தி அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறதே ஒழியக் குறைந்ததாகக் காணோம். அந்த உண்மையை அதன் சமீப காலத்திய நிகழ்ச்சிகள் நிரூபித்து வருகின்றன.

—தமிழ்ப்பித்தன்

தயாராகிறது !

அரசியல் அறிஞர்கள்
தமிழ்ப் பேராசிரியர்கள்
நாடக வல்லுனர்கள்
எழுத்தாளர்கள்
உடன் பழகிய தோண்டர்கள்

ஆகியோர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களைப் பற்றிக் கூறிய கருத்துச் சுரங்கம்

தலைவர் நெடுஞ்செழியன்

★

பூரணி பதிப்பகம், சென்னை-1.

சந்தாதாரர் கவனத்திற்கு!

★

பொங்கல் மலர் பெற விரும்பும் சந்தாதாரர்கள் ரூ. 2 தனியாக அனுப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

—நிர்வாகி.

மனம்போல வாழ்வு...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வசமாக சட்டம் அப்படி இல்லை. அதன்படி சரசு குற்றவாளி தான்.

சிறைக்கு வந்த முதல் நாள் தான் அவளது கண்களில் ஓய்வு ஒழிவின்றிக் கண்ணீர் வடிந்தது. மறுநாள் அவள் ஓரளவு தெளிந்திருந்தாள். சிறையில் இருந்த பெண்களில் சிரித்த முகத்தோடு இருந்த ஒரிருவருடன் பழக ஆரம்பித்தாள். அவர்களிலே ஒருத்தி, மாமியாரைக் கொன்றவள். தான் தன் மாமியாரைக் கொன்றதற்குரிய காரணங்களை அவள் எடுத்து விளாசினாள். சட்ட நிபுணர்களையே திகைக்க வைத்தவள் போல் காணப்பட்டாள். தன் கணவனோடு சேரவிடாமல் அவளை அடித்தாளாம் மாமியார். அவள் இருப்பதால் தானே இடைஞ்சல் என்று, கொன்றுவிட்டாளாம். அவளைக் கூர்ந்து கவனித்தாள் சரசு. சின்ன வயது; சிரித்த முகம்; சிவப்பாக இருந்தாள். அவ்வளவு அழகையும் ஆயுட்காலம் முழுக்கச் சிறை விழுங்க வேண்டுமென்று நீதி ஆணை பிறப்பித்திருந்தது. அவளைப் பார்த்துத் தன்னைத் தேற்றிக் கொண்டாள் சரசு. தன் கணவனோடு தான் வாழ்ந்த மூன்று மாத காலத்தைப் பற்றிச் சுவையாகப் பேசினாள் அவள். அதையே கனவாகச் சிறையிலே கண்டு கொண்டிருக்கிறாள் என்பது சரசுவுக்குப் புரிந்தது. திடீரென்று அழுவாள்; உடனே தேற்றிக் கொள்வாள். இப்படியெல்லாம் அந்தப் பெண்ணின் பாவங்கள் மாற மாற, அதைக் கவனித்த சரசு தத்துவஞானி ஆகிவிட்டாள்.

என்றாலும் மாணிக்கம், நேசானந்தர், அண்ணி இவர்களின் நினைவு அவளை வாட்டி எடுத்தது. இந்த நிலையில், அவளைப் பார்ப்பதற்கு ஒருவர் வந்திருப்பதாக வார்டர் ஒருவர் செய்தி கொண்டு வந்தார். சரசுவின் மனதிலே ஓரளவு நம்பிக்கை பிறந்தது. சிறையின் முன் பகுதிக்கு நடந்தாள். அங்கே அவளுக்காக நின்று கொண்டிருந்தவரைப் பார்த்ததும் 'ஓ' வென்று கதறிவிட்டாள்.

தொடரும்

தயாரிப்பவர்கள்:

பெல் புகையிலை கம்பெனி

Pro: M. முஹமது ஷரீப் ராவுத்தர்

P. B. No. 11 : : புதுக்கோட்டை.

ஒரு யோசனை

வயது வந்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும் மணந்து இல்லறத்தை நடத்துதல் உலகியல். இம்மணவினை எந்த வயதில் செயற்குரியது என்பது வரையறுக்கப் படாததாக இருக்கிறது. குளிர் மிகுந்த மேலைநாடுகளில் பெண்கள் பக்குவம் அடையும் வயதே 17 முதல் 20 வரை நீடிக்கிறது. ஆனால் நம் நாட்டிலோ 12-13 லேயே பூப்பெய்தி விடுகின்றனர். கல்வியறிவும், எதிர்காலத்தைக் குறித்துத் தெளிந்த எண்ணமுமில்லாதவர்கள், பெண்களுக்குத் திருமணம் செய்ய முனைகிருர்கள்; முடித்தும் விடுகிருர்கள். இதற்கு உடன்பட வேண்டி ஆண்களும் சிறு வயதிலேயே மணந்துகொள்ள - கணவனாக - ஈர்க்கப்படுகின்றனர். ஆக 14 வயதுப் பெண்ணும் 18 வயது ஆணும் மணமக்களாதல் இன்றும் நிகழும் செயல்கள். தொழில் செய்ய விரும்பிப் படிப்போரே குறிக்கோள் எய்தும் வரை மணந்து கொள்ளாது கல்வியைத் தொடர்ந்து முடித்து, பிறகு மணம் செய்துகொள்கின்றனர். ஏனையோர் மேற்கூறிய பிள்ளைமை மணத்தில் ஆழ்வாரே.

மணந்த மறு ஆண்டிலிருந்தே, எத்தனை குழந்தைகள் என்பது தான் விசாரிப்பவரின் முதற் கேள்வி. பண்டை நாட்களில் மக்கட் பெருக்கம் குறைந்து நிலப் பரப்பு மிக்கு இருந்தபோது மக்கட் பெருக்கம் தேவைப்பட்டது. குழந்தைகள் நிறைந்த இல்லமே மங்களமானதாகக் கருதப்பட்டது. உலக மகா யுத்தத்தின் பயனாக போரில் வீரர்கள் மடிந்து அதன் விளைவாக நாட்டில் உடல் உரமுள்ள வினைஞரும் வீரரும் குறையுறவே ஹிட்லர்கூட குழந்தை பெறுவோர்க்குப் பரிசில் அளித்தான். இயற்கையாகவே மனிதர்க்குப் பாலுணர்ச்சியால் இனப் பெருக்கம் பிறர் தூண்டுதலின்றியே நிகழ்வது. அதிலும் இந்தியா போன்ற வெப்பநாடுகளில் மக்கட் பெருக்கம் மிக்கு இருத்தல் கண்கூடு. இதைக் கட்டுப்படுத்தலே பெரிய பளுவாக இருக்கிறது. உலகிலேயே மக்கட்பெருக்க விகிதம் மிகுந்த நாடு இந்தியாதான். ஆண்டு ஒன்றுக்கு ஒரு சதவிகிதம் உயர்கிறது என்ருல் 36 கோடி மக்கள் கொண்ட நாட்டில் ஆண்டிற்கு 36 லட்சம் மக்கள் (இருக்கும் எண்ணிக்கையோடு) அதிகப்படுகிருர்கள் என்று பொருள்.

மக்கட் பெருக்கத்துக்கேற்ப நிலப் பரப்பு விரிவதில்லை. கைபடாக் காடுகளைக் கழனியாக்க முனைந்தாலும் மக்கட் பெருக்கத்திற்கு ஏற்ற அளவு வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவோ அல்லது இருக்கும் தரத்தையே சரிந்துபோகாமல் காத்துக்கொள்ளவோ, திருத்திய நிலத்தால் வரும் விளைவால் முடியாது. அதாவது மக்கட் பெருக்கத்தின் வேகத்திற்கு நிலப்பரப்பின் பயன் ஈடு கொடுத்துத் தோது ஆகாது.

மக்கட் பெருக்கம் 1, 2, 4, 8, 16, 32 என்ற விகிதத்தில் வளரும் தன்மையது. நிலவருமானம் 1, 2, 3, 4, 5 என உயரும் தன்மையது. மக்கட் பெருக்கம் ஒரு உச்ச எல்லையில் நிற்பதல்ல. நில வருமானம் ஒரு எல்லையில் நிற்பது. அதாவது ஒரு ஆணும் ஒரு பெண்ணும் மணந்து இரு குழவிகளைப் பெற்ருல் சில ஆண்டுகளுக்குப் பின், இரு குழவிகளும் இரண்டு குடும்பங்களாகின்றன. பெற்ரேரின் குடும்பத்தைச் சேர்க்க மொத்தம் மூன்று குடும்பங்கள் ஆகின்றன. இப்படியே இரட்டிப்புத்தன்மையில் அதிகரிக்கும். ஆனால் 1 காணி நிலத்தில் 10 கலம் விளைகிறது என்று வைத்துக்கொண்டால். இன்னும் கொஞ்சம் அதிக உரம் இட்டு உழைப்பும் செலுத்தினுல் 12 கலம் கிடைக்கலாம். அதே போன்று மீண்டும் செய்தால் 12 கலத்திற்குமேல் 15 கலம் கிடைக்கலாம். பிறகு எவ்வளவுதான் எரு இட்டாலும் விஞ்ஞான முறைப்படி பயிரிட்டாலும், விளைவு ஒரு குறிப்பிட்ட உச்ச அளவுக்கு மேல் (எத்தனை ஆண்டுகள் சென்ருலும்) போகமுடியாது. 10 கலம் விளைந்த 1 காணியில் 100 ஆண்டுகள் கழித்து 1000 கலம் விளையும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் 10 கோடி மக்கள் கொண்ட வெப்ப நாட்டில் பல ஆண்டுகளுக்குப் பிறகாவது 100 கோடி மக்கள் இருக்கலாம்.

வெள்ளம், போர், காலரா போன்ற பெருவாரிக் கொள்ளை நோய்கள். இன்ன பிறவற்ருல் மக்கட் பெருக்கம் குறையாதா? என வினவலாம். குறையலாம். ஆனால் குறைந்துதான் தீரவேண்டும் என்ற நியதி இல்லை. போரே மூளாமல் இருக்கலாம். வெள்ளத்தைத் தடுக்க வழிவகை செய்து கொள்ளலாம். காலரா முதலிய கொள்ளை நோயை மருத்துவ முறை கொண்டு தடுத்துவிடலாம். கல்வியறிவும் விஞ்ஞானத்தின் பயனும் வாழ்க்கை வசதிகளும் உயரும் இந்நாளில் சிறுவயதில் இறப்பவர் தொகை குறைந்துகொண்டே வருகிறது. ஆக எப்படியும் மக்கட் பெருக்கம் அதிகமாகிக்கொண்டே போக சாதகமான சூழ்நிலையும், காலமும் உருவாகின்றன. இப்படி அதிகரிக்கும் மக்கட்கு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைய வழி செய்வது எப்படி? பொருளாதார முன்னேற்றத்தாலும். விஞ்ஞான சாதனத்தாலும் ஓரளவு மக்கட்கு உயர்தர வாழ்வு முடியும் என்ருலும் அளவிலாது அதிகரிக்கும் மக்கட் பெருக்கத்தை மட்டுப் படுத்தாவிடில் மேற்கூறிய உயர் வாழ்வு எய்தல் இயலாது. அது மட்டுமல்ல வேறு பல தொல்லைகளும் தவிர்க்க முடியாதனவாகும்.

வெயிலில் சென்று உழைக்காதவர்களுக்கும், செல்வந்தர்களுக்கும், அதிகம் படித்தவர்களுக்கும் மிதமிஞ்சி உண்பவர்களுக்கும் பொதுவாக பெரும்பாலும் அதிகம் குழந்தைகள் பிறப்பதில்லை. ஏழைகட்கும், அளவோடு உண்பவர்க்கும், உழைப்பவர்க்கும் அதிகம் படிக்காதவர்களுக்கும் குழந்தைகள் அதிகம் பிறக்கின்றன.

ஏழை எளியவரே நாட்டில் பெரும்பாலோர் ஆதலால் அவர் பெருக்கமே நாட்டின் மக்கட் பெருக்கமாகும்.

குழந்தைகள் அதிகம் கூடாது என்று கட்டுப்படுத்தல் அறிவீனம்; நாட்டில் மக்கள் தொகை உண்பதற்கு மட்டுமல்ல உழைப்பதற்கும் அவர்களே. ஈட்டிய பொருளை உண்பதற்குத்தான் குழந்தைகள் என்பதில்லை. பணத்தைச் சம்பாதிக்கவும் அவர்கள் பிறகு பயன்படுவார்கள். "உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் உண்ண ஒரு வாயும், ஒரு வயிற்றுடன் மட்டும் பிறப்பதில்லை, உழைக்க இரு கைகளுடனும்தான் பிறக்கிறது." ஆதலால் மக்கட் பெருக்கமே நாட்டின் செல்வப் பெருக்கமாகும். மேலும் இரண்டு மூன்று குழவிகளோடு நிறுத்திவிட்டால், தாகூர் (ஏழாவது பிள்ளை) பெர்னாட்ஷா போன்ற பேரறிஞர்கள் பிறக்க வழி இல்லாது போகும். செருப்புக்குப் பயந்து காலைக் குறைப்பதா? திரைகடலோடியும் திரவியம் தேடு. உலகம் பரந்து கிடக்கிறது என்பாருமுளர்.

நம் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், தமிழகத்திற்கு வெளியிலுள்ள இலங்கை, மலேயா, ஆமதாபாத் போன்ற இடங்களிலுள்ள தமிழர் பிற வசதியோடு வாழ்ந்தாலும், தமிழ்நாட்டில் இருந்து மகிழ்வோடு வாழ முடியவில்லையே என்ற மனக்குறையோடும் ஏக்கத்தோடும்தான் வாழ்கின்ருர்கள். வைதீக மனப்பான்மையாளர், இப்பிறவி நீத்து இறைவன் திருவடி நிழலில் என்றும் இன்ப மெய்தி இருக்க ஒரு உலகம் இருப்பதாக எண்ணி மகிழ்வதுபோல தமிழகத்திற்குப் புறத்துள்ளவர், தமிழகத்தை நினைத்து மகிழ்கின்றனர்.

ஒரு திட்டமான எண்ணமின்றி நிறையக் குழந்தைகளைப் பெற்ற ஏழைகள் "காப்பதற்கும் வகையறியீர், கைவிடவும் மாட்டீர்" என்ருற் போல அல்லலுறுதலினும் அளவுடன் இருத்தல் நலம். வெளி நாட்டில் தமிழர் நிலை, நிரந்தரமான நிம்மதியுடையதாக இருக்கவில்லை. அடிக்கடி அரசாங்கத் தொந்தரவும், அந்நாட்டு மக்களால் தொல்லைகளுமாக உள்ளன. நினைத்தபடி பணத்தைத் தாய்நாட்டிற்கு அனுப்பத் தடை போடுகிறது. குடி உரிமை அளிக்க மறுக்கிறது. வெளி ஏற்றுகிறது. ஆஸ்திரேலியா தன் இன மக்களை ஒழிய ஏனையோரை, அங்கு நிரந்தரக் குடிமகனாக ஏற்க மறுக்கிறது. இவையனைத்திற்கும் ஒரே வழி அளவுடன் குழந்தைகளைப் பெறுதலேயாம்.

முற்கூறியபடி சிறுவயதில் மணவினையை முடிக்காது ஒத்திப்போடுதல், ஒருவகையில் மக்கட் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும். உடலுறுப்புகள் சரிவர வளரா முன்னமே 14, 15 வயதுகளில் பெண்களுக்கு மண முடிப்பதால் முதற் குழந்தைக்குப் பிறகே உடல் தளர்ந்து, எழில்குன்றி எழுச்சி இன்றி நைந்து நலிகிருள். உலக அறிவு நிரம்பப் பெற கல்வியறிவு பெறுதவளாகிருள். இதேபோன்று ஆணுக்கும் உடல் வளர்ச்சியும் கட்டுக்கோப்பும் குலைகிறது. போதிய உடல் உரமும் அறிவு முதிர்ச்சியும் பெற பெண்ணுக்கு 20, 23 வயதும் ஆணுக்கு 25, 27 வயதுமாவது தேவை. இவ்வயதில் மணப்பதால் 14 வயது முதல் 20, 23 வரையிலுள்ள 6, 7 ஆண்டுக் காலத்தில் பிறக்க இருக்கும் இரண்டு மூன்று குழந்தைகள் பிறப்பது தவிர்க்கப்படுகின்றது. உடல் உறுப்புக்கள் முழுவளர்ச்சி அடைந்தபின் (20, 25 வயதில்) கருவுற்ருல் பிறக்கும் குழந்தைகளும் நல்ல உடல் வளமும் பொலிவும் அறிவும் பெற்று விளங்கும். பெற்ரோரும் வலிவின்மை காரணமாக பீடிக்கும் நோயின் தாக்குதலுக்கு ஆளாக மாட்டார்கள்.

கல்லூரிப் படிப்பு போன்ற உயர் படிப்பிற்குப் பொருள் வசதி இல்லாவிட்டாலும், வேறு துறையில் பணி புரிய நேரிட்டாலும் பொறுத்து இருந்து மேற்கூறியபடி மணத்தலே சிறந்தது. ஓய்வுநேரங்களில் விரும்பியதைப் படிக்கவோ நாட்டமுள்ளவற்றில் சிந்தையைச் செலுத்தி - கலை, சித்திரம், இசை முதலியவற்றில் தேர்ச்சி பெறவோ வாய்ப்பு உண்டாகும். நேரம் கிடைக்கும்.

அளவில்லாத குழந்தையைப் பெற்றுத் தள்ளாத வயதில் அவைகளின் படிப்பிற்கும், மணத்திற்கும், தொழிற்கும் அல்லலுறுவோரின் நிலை சொல்லி முடியாது.

மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான் என்ற கண்மூடி வேதாந்தம் மலையேறி விட்டது. அறிவே அனைத்தும் என்ற புதுஒளி பிறந்துவிட்டது. மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான் என நம்பி இருந்தால் சமயத்துறையில் பணி புரிந்த தாமஷ் ராபர்ட் மால்தஸ் என்பார் 1798ல் மேற்கூறிய மக்கட் பெருக்கத்தின் தீய விளைவுகளை நினைந்து உலகுக்கு ஓர் உண்மையை எடுத்து இயம்பி இருக்கவேண்டிய அவசியமில்லையே?

மணவினை ஏற்கும் இருபாலரும் பிறக்கும் குழந்தைகளும் நலமுற வாழ, பொறுத்திருந்து மணந்து, அளவுடன் குழவிகளைப் பெறுதல் நலமுடன் வாழ வழியாம்.

—மா. பொ. இராமச்சந்திரன்

வருமான வரி!

அமெரிக்காவில், ஒரு பிரபல வியாபாரிக்கு அரசாங்கம் வருமான வரி விதித்தது. முதலில், பத்தாயிரம் டாலர் தரவேண்டும் என்று சொன்னது. அவர் தந்துவிட்டார். அடுத்து இருபதாயிரம் விதித்தது. அதையும் அவர் தந்துவிட்டார். சிறிது நாட்களில் தொகையை அரசாங்கம் அதிகமாக்கியது. லட்சம் டாலர் விதித்தது. அதைக் கண்ட வியாபாரிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஒரு மோட்டார் நிறையக் கரன்சி நோட்டுக்களையும், சில இயந்திரங்களையும் எடுத்துக்கொண்டு வருமான வரி அலுவலகத்துக்கு வந்தார்.

"இதுவரை நானே அச்சடித்துக்கொண்டிருந்தேன். இனி என்னல் முடியாது. நீங்களே அச்சடித்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லி, தான் கொண்டுவந்திருந்த கரன்சியையும் இயந்திரத்தையும் போட்டுவிட்டுத் திரும்பினர்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லேப் போல் அவன் காணப்பட்டான். அவன் போகும்போது பரிதாபமாக இருந்தது. காந்தச் சவுக்குக் கட்டுப்பட்ட சிங்கம் போல் அவன் மாளிகைக்குள் போய்விட்டான்.

அபி நின்ற இடத்திலே அசையாமல் நின்றாள். தைமூரின் சிங்காதனம், பொருள் பெற்ற மணிமண்டபம், புலித் தோல், கருவூலம்-இவை ஒவ்வொன்றாகத் தைமூரின் இதயத்திற்கு வந்து வந்து போயின. கடைசியாக, யஜ்தானி விழுந்து கிடந்த காட்சி அபியின் நெஞ்சுக்கு வந்தது. அப்போதுதான் அபியின் கைகள் அசைந்தன. கண்ணீரைத் துளிர்த்தான். ராஜசபை வெறிச்சென்றிருந்தது.

★

உம்மதுலுக்கு அன்று முழுதும் மனநிலை சரியாக இல்லை. படுக்கையில் சுருண்டு சுருண்டு படுத்தாள். உம்மதுல்தான் அபி என்று தைமூர் தெரிந்துகொண்டிருக்கக் கூடும் என்ற பயமே அவளை உலுக்கிக்கொண்டிருந்தது.

இருள் மயங்கும் நேரம் நெருங்கியது. வழக்கம்போல் ரோஜாத் தோட்டத்திற்குப் போனாள். ஆனால் வழக்கம்போல் வாச மலர்களை வாரி அணைத்துக் கொள்ள அவளால் முடியவில்லை. உடலிலே தெம்பிருந்தாலும் மனதிலே மகிழ்ச்சியிருந்தால்தான் எந்தக் காரியத்தையும் மனிதனால் செவ்வனே செய்ய முடிகிறது. உணர்ச்சியை இழந்திருக்கும் மனிதன் தானகச் சுடுகாட்டுக்கு நடந்து செல்லுபவனைப் போல் இருக்கிறான். சுவை அரும்புகள் மழுங்கிப் போகின்றன. நாசித் துவாரங்கள் தூர்ந்துவிட்டன போல் படுகிறது. உம்மதுல் பூங்காவில் அப்படித்தான் உட்கார்ந்திருந்தாள். கவலையை மறக்கக் காற்று வாங்கப் போகிறவர்களும், கண்ணுக்குப் பிடித்த காட்சிகளைக் காணப் போகிறவர்களும் இறுதியிலே வீடு திரும்பும்போது, இருள் சூழ்ந்த உள்ளம், அருள் படிந்த முகம் கொஞ்சமும் மாறாமல்தான் வருகிறார்கள். இதயம், மூளை ஆகிய மேலிடங்களின் உத்தரவு கிடைக்கப் பெற்றால்தான் கண்கள் வேலை செய்யும் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். இதயமே சோர்ந்து கிடக்கும்போது, மூளையே குழம்பி இருக்கும்போது கண்களென்ன கண்கள்! அவை புண்கள்! இயற்கையின் ஜோடனை அங்கங்கள்!

உம்மதுல் கண்களைத் திறந்தபடி கனவு கண்டுகொண்டிருந்தாள். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு தோட்டத்தின் ஒரு மூலையில் மழை பெய்வதைப் போல் சலசலவென்று சத்தம் கேட்டது. உம்மதுல் திரும்பிப் பார்த்தாள். மனோரஞ்சிதச் செடியை யாரோ அசைத்துக் கொண்டிருப்பதாக அறிந்தாள். மீண்டும் மோன நிலை பெற்றாள். தைமூர் அவளைக் கட்டி வைத்து உதைப்பது போலவும், அல்லாவின் உபதேசங்களைத் தைமூர் துர்விநியோகம் செய்கிறார் என்றும் அவள் தைமூரை எதிர்த்துப் பே... போலவும் அவள் மன... முன் பல காட்சிகள் வந்து வந்து போயின.

மறுபடியும், தோட்டத்தின் இன்னொரு மூலையில் செடி கொடிகள் அசைந்தன. குறிப்பிட்ட நான்கைந்து செடிகளை மட்டும் பெரும்புயல் தாக்குவது போல் காணப்பட்டது. உம்மதுல் எழுந்து அந்தப் பக்கமாகச் சென்றாள். அவளுடைய நடையில் ஆண் வேடத்திற்குரிய கம்பீரமுமில்லை; பெண்ணுக்குரிய நளினமுமில்லை. கால்கள் தரையில் பதிந்தன. சடலம் நகர்ந்து கொய்யாமரத்தடிக்குச் சென்றது.

நடுத்தர வயதுடைய அழகி ஒருத்தி கொய்யாமரத்தில் ஒய்யாரமாகச் சாய்ந்து கொய்யாக் கனியைக் கடித்துக் கொண்டிருந்தாள்.

அபியின் வருகைக்காகத்தான் அந்த அழகி காத்திருந்தது போலிருந்தது.

"யார் நீங்கள்! தோட்டத்தில் புகுந்து தனியாக இருக்கிறீர்களே! திக்குத் தெரியாமல் நுழைந்து விட்டீர்களா? பார்த்தால் அதிகாரத்தில் மிதந்து கொண்டிருப்பவர்களைப் போல் இருக்கிறீர்கள்!" அபி குழைவாகக் கேட்டாள்.

அழகி சிரித்தாள். அந்தச் சிரிப்பிலே போதை இருந்தது. மயக்கம் இருந்தது. "என்னையா யார் என்று கேட்கிறீர்கள்? நான்—நான் தோகை மயிலைத் தேடி வந்திருக்கும் பெண் மயில். இழந்து கொண்டிருக்கும் வாழ்வைக் கட்டிக்காக்கத் துணை தேடி வந்திருக்கிறேன் அன்பரே! உங்களை நம்புகிறேன், ஆம், உங்களைத்தான் நம்புகிறேன். நான் யார் என்று சொன்னால் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள்? நான்...!"

"நீங்கள் யார்?"

"பயப்பட மாட்டீர்களே! தைமூர் பாதுஷாவின் முதல் மனைவி!"

(தொடரும்)

போன் No- 226.

ஷேக் ஷூ மார்ட்,

பழனி.

கை தேர்ந்த ஆட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் மிகச் சிறந்த மிதியடிகளும், ஷூஸ்களும், கவர்ச்சியூட்டும் டிசைன்களில் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

பிளக்ஸ் & பாட்டா ஏஜண்ட்
உரிமையாளர்

பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி

சித்த வைத்தியசாலை.

56 வருட அனுபவம் பெற்றது

தீராத கொடிய வியாதிகளையெல்லாம் தீர்த்து பல்லாயிரக்கணக்கான நற்சாட்சிகள் பெற்று இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நிகரில்லாப் புகழ் பெற்றது.

பெண்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.

சூதக சம்பந்தமான சகல குற்றங்களும் நீங்கி புத்திர சந்தானம் உண்டாக பழநி ஆர். எம். கே. கெற்ப சஞ்சீவி எண்ணை சாப்பிடுங்கள்.

பெண்களுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்றுவலியை அந்த க்ஷணமே நிறுத்தும். எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட சூதக வயிற்றுவலியும், சூதக சிக்கலும் இதில் அவசியம் தீரும். காலாகாலத்தில கிரமப்படி பஹிஷ்டையாகும். கெற்பப் பையிலுள்ள 6-வித குற்றமும் நீர்ந்து கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். அனுபவத்தில் கைகண்டது. சூதகவயிற்றுவலி இருக்கும் வரை கெற்பம் தரிக்காது. **மேற்படி வலி தீர்ந்து கெற்பம் தரிக்க வேண்டுமானால்** பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி கெற்ப சஞ்சீவி எண்ணை சாப்பிடுங்கள்.

தபால் செலவு உள்பட ரூ. 7-10-0.

தங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி! விபரமாய் எழுதுங்கள். கேட்லாக் இனம்.

பிரதம வைத்தியர் & மானேஜர் :—**சித்த வைத்தியக் களஞ்சியம் ஆர். எம். கே. சிவசுப்ரமண்ய ஓம்.**

ஆர். எம். கே. வேலுசுவாமி, சித்த வைத்தியசாலை,

தபால் பெட்டி நெ. 16, (டெலிபோன் நெ. 219) பழநி. **(S.I.)**

தினசரி பொதுமக்களுக்கு வேண்டிய உடன் குணப்படுத்தும் ஓர் சிறந்த மருந்து!

ராம்பென் பெயின்பாம்



தலைவலி, ஜலதோஷம், காய்ச்சல், உடல்வலி முதலியவைகளைக் குணப்படுத்துவதில் தலை சிறந்தது!

ராம்பென் பெயின்பாம்

எல்லோர் இல்லத்திலும் என்றும் இருக்கவேண்டிய ஒன்று!!

ராம்பென் பெயின்பாம்

தயாரிப்பாளர் : ராம்பென் பர்மஸூடிக்கல்ஸ், பெங்களூர்-4.

— முழு விற்பனை உரிமையாளர் —

மெடிகல் யூனியன்,

போன் எண்: 91. தந்தி: LIVOMAZ தபால் பெட்டி எண்: 38.

கீழராச வீதி : : புதுக்கோட்டை

திருப்புத்தூர் வட்டத்தில் கண்ணதாசன்

ஆ. தெக்கூர்

6-12-56 மாலை 6 மணிக்கு ஆ. தெக்கூரில் நடைபெற்ற தி. மு. க. பொதுக்கூட்டத்திற்கு தோழர் முத்து அவர்கள் தலைமை வகித்தார்கள். கண்ணதாசன் வடநாட்டாட்சியின் அநீதிகளை விளக்கிப் பேசினார்.

கீழச்சிவல்பட்டி

14-12-56 மாலை 6 மணிக்கு கீழச்சிவல்பட்டி தி. மு. கழகத்தின் சார்பில் பொதுக்கூட்டம் அண. முத்தையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தொகுதிக் குழுச் செயலாளர் பெரி. அழகு, வலம்புரி எழிலன், கண்ணதாசன் ஆகியோர் பேசினர். கூட்டத்திற்கு ஏராளமான பெண்களும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சத்துருசங்காரக் கோட்டை

15-12-56 மாலை 6 மணிக்கு இவ்வூர் தி. மு. கழகத் தோழர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக்கூட்டத்திற்கு மு. ராமச்சந்திரன் அவர்கள் தலைமைவகித்தார். வலம்புரி எழிலன், கண்ணதாசன் ஆகியோர் பேசினர்.

மருதங்குடி

16-12-56 மாலை 3 மணிக்கு மருதங்குடியில் நடைபெற்ற அம்பேத்கார் அனுதாபக்கூட்டத்திற்கு குன்றக்குடி அடிகளார் தலைமை வகித்தார்கள். அம்பேத்காரின் தொண்டினை விளக்கி, கண்ணதாசன், கூத்தகுடி சண்முகம் ஆகியோர் பேசினர்.

மனையப்பட்டி

16-12-56 மாலை 5 மணிக்கு இவ்வூர் பாண்டிய மண்டல உழவர் சங்கச் சார்பில் லெ. சந்தானம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உழவர்கள் கஷ்டம் தீரும் வழி வகைகளை விளக்கி, கண்ணதாசன் பேசினர்.

கண்டரமாணிக்கம்

16-12-56 மாலை 6-30 மணிக்கு இவ்வூர் தி. மு. க. கிளை சார்பில் தோழர் இளமதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தி. மு. கழகம் ஏன் தேர்தலில் நிற்கிறது என்பதை விளக்கி கண்ணதாசன் பேசினர். மாற்றுக்கட்சியினரின் கேள்விகளுக்குச் சரியான பதில் கூறி விளக்கினார்.

திருக்களாபட்டி

17-12-56 மாலை 4 மணிக்கு இவ்வூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு திரு. ராமசாமி அவர்கள் தலைமை வகித்தார். திருக்களாபட்டி தி. மு. க. கிளையைத் துவக்கி வைத்து கண்ணதாசன் பேசியபின் தொகுதிக் குழுச் செயலாளர் பெரி. அழகு, அ. குருசாமி ஆகியோர் பேசினர். இந்த ஊரில் நடக்கும் முதல் பெரிய பொதுக்கூட்டம் இதுதான் என்று அந்த ஊர்வாசிகள் கூறுகிறார்கள்.

மு. சூரக்குடி

17-12-56 மாலை 6 மணிக்கு இவ்வூர் தி. மு. கழக சார்பில் தோழர் மெய்யப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றபொதுக்கூட்டத்தில் நா. பழனிநாதன், அ. குருசாமி, கண்ணதாசன் ஆகியோர் பேசினர். கூட்டத்தில் சூரக்குடி காங்கிரஸ் பிரமுகரும் பஞ்சாயத்து போர்டு தலைவருமான திரு. அழகப்பன் அவர்கள் காங்கிரசின் அநீதிகளைக் கண்டித்து, விலகிக்கொண்டு இனி தி. மு. கழகத்தில் தொடர்ந்து பணியாற்றப் போவதாக உறுதி கூறினர். மக்கள் கையொலி செய்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

சதுர்வேதமங்கலம்

18-12-56 மாலை 6 மணிக்கு சதுர்வேதமங்கலம் தி. மு. கழக சார்பில் மு. அ. ந. அழகு அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தொகுதிக் குழுச் செயலாளர் பெரி. அழகு சிங்கம்புணரிகட்டாரி, பாகனேரி திருஞானம், கண்ணதாசன் ஆகியோர் பேசினர். கூட்டத்தில் தோழர்ஆண்டியப்பன் மகனுக்கு கண்ணதாசன் அவர்கள் இளஞ்செழியன் என்று பெயர் சூட்டியதின் நினைவாக தேர்தல் நிதிக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

தி. மு. கழக ஊழியர் கூட்டம்

18-12-56 மாலை 4 மணிக்கு திருக்கோட்டியூர் தொகுதி தி. மு. கழக ஊழியர் கூட்டம் காளாப்பூரில் ஞா. தியாகஅரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் திருக்கோட்டியூர் தொகுதியை 4 பகுதிகளாகப் பிரித்து கிழ்க்கண்ட கமிட்டி அமைக்கப்பட்டது. சிங்கம்புணரி பகுதி கமிட்டி தலைவர் ப. உ. ப. பாலகிருட்ணன், திருப்புத்தூர் பகுதி கமிட்டிதலைவர் வை. கணபதி, தெக்கூர் பகுதி கமிட்டி தலைவர் எம். இபுருகிம், திருக்கோட்டியூர் பகுதி கமிட்டிதலைவர் கரு. முனியாண்டி,

ஆகியவர்களும் ஒவ்வொரு கமிட்டிக்கு 15 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர் கண்ணதாசன் அவர்கள் ஊழியர்களின் கடமைகளைக் குறித்து விளக்கினர்.

அரியலூர் விபத்தில் இறந்து போனவர்களின் குடும்பத்துக்கு அனுதாபம் கூறியும், டாக்டர் அம்பேத்கார், நாதசுர மன்னர் டி. என். இராசரத்தினம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்திற்கு பல ஊர்களைச் சேர்ந்த இருநூறுக்கு மேற்பட்ட ஊழியர்கள் வந்திருந்தனர். காளாப்பூர் தி. மு. கழகத்தார் எல்லோருக்கும் சிற்றுண்டிவழங்கி சிறப்பாக வரவேற்ருர்கள்.

✶

புதுடில்லியின் அழகைக் கெடுத்தவர் பண்டிதர் நேரு!

தலைமுறை தலைமுறையாக டில்லியே தலைநகராக இருந்து வந்திருக்கிறது. எந்த நேரத்தில் எந்த ராஜா வந்தாலும் டில்லியின் கோட்டைவாசல் திறந்துகிடந்ததாகவே சரித்திரம் சொல்லுகிறது. அத்தகைய தலைநகரத்தைப்பற்றி பண்டித நேரு அண்மையில் ஒரு சேதியை வெளியிட்டிருக்கிறார். ஒரு காலத்தில் டில்லி அழகாக இருந்ததாம்—ரம்மியமாகத் தோன்றியதாம்! இப்போது அப்படியில்லையாம்! எங்கு பார்த்தாலும் கட்டிடங்களாகவே இருக்கிறதாம்! தலைநகரில் நெருக்கடி ஏற்பட்டுவிட்டதாம்! இப்படியெல்லாம் பெரும் பெரும் கட்டிடங்களைக் கட்டி நகரை அலங்கோலப் படுத்தக்கூடாதாம்!-பண்டிதர் மிகவும் கோபமாகப் பேசியிருக்கிறார் இவ்வாறு.

பண்டிதர் நினைத்திருந்தால் அந்தக் கட்டிடங்களை கட்டவிடாமல் தடுத்திருக்கமுடியும்! ஏனென்றால், அவர் எந்தக் கட்டிடங்களைப் பார்த்து சீறினரோ அந்தக் கட்டிடங்களுக்கெல்லாம் இதே பண்டிதர் தான் அஸ்திவாரக்கல்லை நாட்டியிருக்கிறார். வேடிக்கையாக இருக்கிறதல்லவா!

நன்றி அறிவிப்பு

திருக்கோட்டியூர் தொகுதிக் குழுவின் சார்பில் 14-12-56 முதல் 18-12-56 வரையிலும் சுமார் 10 ஊர்களில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டு சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றிய கண்ணதாசன் அவர்களுக்கும் சுற்றுப்பயணத்தில் உடன்வந்து சிறப்பித்த துணைச்செயலாளர் செபத்தி. பொருளாளர் மு. அ. ந. அழகு, கா. காத்தமுத்து, ஞா. தியாக அரசு, அ. குருசாமி ஆகியோருக்கும் ஊழியர் கூட்டத்தை நடத்தித் தந்த காளாப்பூர் கிளைக் கழகத் தோழர்களுக்கும் ஊழியர் கூட்டத்துக்கு வந்திருந்த எல்லா ஊழியர்களுக்கும் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து கொள்ளுகின்றேன்.

இப்படிக்கு
பெரி. அழகு
செயலாளன்
திருக்கோட்டியூர் தொகுதிக் குழு
சிங்கம்புணரி

குபேரன் கண்ணீர்...

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

முன்னே கையேந்தி நின்றான். ஏழையை அவன் கூர்ந்து பார்த்தான். அவனது உதடுகள் துடித்தன. துயரம் பெருகியது. நெஞ்சு விம்மித் தாழ்ந்தது. இதயத்தில் தோன்றிய கருணை, கண்களிலே காட்சி தந்தது. ஏரிக்கரையிலே அவனது இதயக் குழப்பத்துக்குக் காரணமான பொருள் இன்று அவனை வரவேற்று நின்றது. ஏழையின் அருகே சென்றான். கண்களிலே நீர் மல்க, பாசத்தோடு கட்டிப் பிடித்து அவனது நெற்றியிலே முத்தமிட்டான். அவனை மாளிகைக்குள்ளே அழைத்துச் சென்று, அவனது கைநிறையத் தங்கத்தையும், வைரத்தையும் கொடுத்து, "இன்று இதை எடுத்துச் செல் சகோதரா! நாளை மீண்டும் வா. தனியாக அல்ல. உனது தோழர்களோடு. வந்து உங்களுக்கு வேண்டியதை யெல்லாம் இங்கிருந்து எடுத்துச் செல்லலாம்." இதைக் கேட்ட அந்த ஏழையின் முகத்திலே புன்னகை தோன்றியது. பெருமழையிலே உதிர்ந்து போன மலரை நினைவூட்டியது அவனது புன்னகை.

ஏழை போய்விட்டான். அவனையே பார்த்துக் கொண்டிருந்த மாளிகைவாசி, "எல்லாப் பொருள்களும் நன்மைதான் பயக்கின்றன. செல்வமும்தான். ஏனென்றால் மனித இதயம் படைத்தவர்களுக்கு அது நல்ல பாடத்தைக் கற்பிக்கிறது. யாழ் மீட்டத் தெரியாதவன் அதை மீட்டினால் நல்ல இசை கிடைக்காதல்லவா! ஆனால் யாழ் வல்ல பாணன் மீட்டும்போது! காதலைத் தனது நெஞ்சுக்குள்ளேயே பூட்டி வைப்பவனை அதுவே அழித்துவிடும். ஆனால் அதே காதல் இன்னொரு காதல் நெஞ்சோடு உறவாடினால்...!

ஆமாம்! செல்வமும் அதைப் போலத்தான். நல்ல மனம் படைத்தவர்களிடம் இருந்தால், பிறருக்கும் பயன்படும், அவனுக்கும் அமைதியையும், மகிழ்வையும் தரும்," என எண்ணினான். ★

மணத்திற்கும், மனத்திற்கும் தொடர்புண்டு
ஜூபிடரின்
அண்ணபத்தி
JUPITER PERFUMERS
M.S.T.V. NEETHI MOHAN, MADURAI.
எங்கும் கிடைக்கும்.



திருக்குறள் புதை பொருள்

திருக்குறள் உலக அறிஞர்கள் பலராலும் சிறந்த நூல் எனப் புகழப்பட்ட ஒன்று. அதன்கண் உள்ள புதைபொருளை இந் நூலில் **தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம்** விளக்கியுள்ளார்.

எந்த ஒரு பொருளையும் பற்றி எழுதுவதிலே ஆசிரியர் வல்லவர். அதிலும் குறள் பற்றி விளக்கமோ அல்லது அதன் நயம்பற்றி விரிவுரையோ செய்வதில் ஆசிரியர் சிறந்தவர் என்பதை இந்நூல் தெளிவுறுத்துகிறது. குறளிலே பொதிந்துள்ள கருத்துக்களை அழகாக, இனிய, எளிய தமிழ் நடையிலே எழுதியுள்ளார். ஒழுக்கம், சான்ருண்மை, கொடுங்கோன்மை, உழவு முதலிய பன்னிரண்டு அதிகாரங்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குறள் வெண்பாவை எடுத்துக்கொண்டு அவர் விளக்கும் விதம் நன்ருகவே இருக்கிறது. விளக்கும்போது அவர் தரும் எடுத்துக்காட்டுகள் திறம்பட இருக்கின்றன.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்க லாதார்.

—என்ற குறளுக்கு ஒரு திருத்தமும் சொல்லியிருக்கிருர். செயற்கரிய செயலைச் செய்பவர்கள் பெரியவர்கள் என்பது சரிதான். ஆனல், அப்படி, செயற்கரியவற்றைச் செய்யாதவர்கள் சிறியர் என்று சொன்னல், அது பொருந்தாது. அதை ஆசிரியர் தவறு என்று குறிப்பிடுகிருர். "சிறியர் **செயற்குரிய** செய்கலாதார்" என்று திருத்தமும் சொல்லி யிருக்கிருர். செய்ய இயலும் சாதாரண காரியங்களைக் கூடச் செய்யாமல் இருக்கிருர்களே, அவர்கள் தான் சிறியர். ஆசிரியரின் இந்த ஆராய்ச்சி நயமானதாகும்.

அழகிய முறையில், உயர்ந்த காகிதத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்நூலின் விலை **எட்டணுத்தான்.**

எழுதியவர்:
தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம்.

வெளியீடு:
பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1.

வாழ்க மணமக்கள்

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையின் ஒரு பருவத்தைக் கழித்துவிட்டு. புதிய பருவத்தை —இனிய பருவத்தைத் துவங்குகிருன் மணவாழ்க்கையின்மூலம். புதிதாகத் திருமணம் செய்யும் ஒருவனைக் கண்டால் அவனது நண்பர்கள் ஆனந்தப்படுகிருர்கள். ஒரு சிலர் மணமகனுக்கு ஆசி கூறுகிருர்கள். சிலர், 'மண வாழ்க்கை பயங்கரம்' என்று சொல்லி எச்சரிக்கிருர்கள். உண்மையிலேயே மணவாழ்க்கை பயங்கரம்தான? இல்லை, பாசம் மிகுந்ததா? இதைத்தான் இந்நூலாசிரியர் **ப. தனுஷ்கோடி** விரிவாக விளக்கியிருக்கிருர்.

மணமகனுக்கு என்ற பகுதியில் மணமகனுக்குப் பல அறிவுரைகள் கூறியிருக்கிருர்.

மணமகளுக்கு என்ற பகுதியில் மணமகள் நடந்து கொள்ள வேண்டிய முறை—வாழ்க்கையை நடத்தவேண்டிய விதம் பற்றி விரிவாக எழுதியிருக்கிருர்.

தம்பதிகள் எந்த அளவுக்குப் பொறுப்புள்ளவர்கள் என்பதை எடுத்துக் காட்டோடு விளக்குகிருர். பொதுவாக 'பிரிவு' ஏற்பட்டால் தம்பதிகளின் வாழ்விலே பரிவு தோன்றுவது இயற்கை. இதை எண்ணித்தான் ஆசிரியர், மணமகளை ஆண்டுக்கு ஒரு முறையாவது பிறந்தகத்துக்கு அனுப்ப வேண்டும் என்று கூறுகிருர். குடும்ப வாழ்க்கையிலே மர்மம் இருக்கக்கூடாது. அந்த மர்மம் வாழ்வையே கெடுத்து விடும் என்றும் எச்சரிக்கிருர்.

இறுதியாக, விருந்தினர்க்கு, உறவினர்க்கு, சகோதரருக்கு, சகோதரிக்கு, வாலிபருக்கு, பெற்ருேருக்கு என்ற பகுதிகளில் அவரவர்களுக்கு உரிய கடமைகளை விளக்கியுள்ளார். இந்நூலை எளிய இனிய நடையில் எழுதியிருக்கும் ஆசிரியரைப் பாராட்டுகிருேம்.

ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய நூல். திருமணங்களுக்குப் பரிசளிப்பதற்கு ஏற்ற நூல். உயர்ந்த காகிதத்தில், சிறந்த முறையில் இந்நூலை வெளியிட்ட கலைஞன் பதிப்பகத்தாரைப் பாராட்டுகிருேம்.

எழுதியவர்: **ப. தனுஷ்கோடி.**
விலை ரூ. 1-8-0.

வெளியிட்டோர்:
கலைஞன் பதிப்பகம், சென்னை-17.

-தமிழ்ப்பித்தன்.

தென்றல்
பொங்கல் மலர்

மிகச் சிறப்பாகத் தயாராகிறது.

★

- பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார்
- டாக்டர் மா. ராசமாணிக்கனுர்
- டாக்டர் அ. சிதம்பரநாதன்
- டாக்டர் மு. வ.
- பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏ.
- க. அறிவழகன், எம். ஏ.
- நா. பாண்டுரங்கன், எம். ஏ.
- ப. வாணன்
- என். எஸ். இளங்கோ
- கவிஞர் வாணிதாசன்
- இராதா மணாளன்
- கவிஞர் முடியரசன்
- க. நாராயணன்
- தமிழ்வாணன்
- நாக. முத்தையா, பி. காம்.
- சிந்தாமணி, பி. ஏ.
- மா. தங்கவேலர்
- தமிழ்ப்பித்தன்
- தென்னரசு
- கண்ணதாசன்

ஆகியோரின் நெஞ்சையள்ளும் கருத்தோவியங்கள் இடம் பெறுகின்றன.

கலைவாணர் என். எஸ். கே.-மதுரம் அவர்களின் குடும்பக்காட்சிகள்-முழுதும் ஆர்ட் பேப்பரில்.

"தலைமுறைக்கு வந்த தலைவன்" - அறிஞர் அண்ணவின் மூவண்ண ஓவியம் - இதுவரை வெளிவராதது. தென்றலுக்கென எடுத்தது-ஆர்ட் பேப்பரில்.

- மற்றும் -

ஓவியர்கள் இராசன், நாத், அய்க்கண் ஆகியோரின் கைவண்ணத்தால் உயிர்பெற்ற எழிலோவியங்கள்.

விதவிதமான விகடத் துணுக்குகள்.

ஆராய்ச்சிக் குறிப்புகள்.

சரித்திரச் சம்பவங்கள்.

கவிஞர் சுரதாவின், 'அந்தாதி பாடவைத்த அழகி',
நெடுஞ்செழியன் தலைமைகளில் நமது கதை
—மதுரையில் கழகம் வளர்ந்தவிதம் பற்றிய முழு விவரம் கட்டுரை வடிவில்.

இத்தனையும் உண்டு.

120 பக்கங்கள் ரூ. 1-8-0.

குறிப்பு:—முன் பணமின்றி யாருக்கும் மலர் அனுப்பப்படமாட்டாது.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு